# செம்மணி

நிலம் 2 துகள் 88 வள்ளுவர் ஆண்டு 2052, 26 பங்குனி - 01 சித்திரை 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-


### தமிழ்க் கூட்டமைப்பு – கோட்டாபய இடையிலான

# பேச்சு சுமூகம் அடைவு மந்தம்



அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பு சமூகமாக முடிந்தது. காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம், காணாமல்போனோர் விவகாரம், புதிய அரசமைப்பு, உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை போன்றன குறித்து இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. எனினும் எந்தவொரு விடயத் தொடர்பிலும் தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை என்று அறிய வந்தது.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எல்லோரும் ஒன்று படுவோம் என்று சந்திப்பின் தொடக்கத்திலேயே அரச தலைவர் அழைப்பு விடுத்தார். இந்த நாட்டின் தலைவர் என்கிற முறையில் அனைத்துக் குடிமக்கள் குறித்தும் தான் சமமாக அக்கறை செலுத்துவார் என்றும் கோட்டாபய தெரிவித்தார் என்று அரச தலைவர் செயலகம் வெள்ளிக்கிழமை விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பது, நீதிமன்றங்களில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விவகாரம், உண்மையைக் கண்டறியும் பொறிமுறை உருவாக்குதல், பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம், காணாமற்போனவர்கள் விவகாரம் ஆகியன தொடர்பாக தமது ஆட்சி தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் அரச தலைவர் அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார் என்று செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

நாம் அனைவரும் ஒரே நாடாகச் சேரவேண்டும் என்று இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார் என்று அந்தக் குறிப்புக் கூறியது. ஒரே நாடு ஒரே தேசமாக நாட்டின் தற்போதைய சிக்கலில் இருந்து வெளிவருவதற்கு அனைவரும் சேர்ந்து இயங்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை என்றும் கிழக்கின் சுவிற்சர்லாந்தாக இலங்கை மாறுவதைக் காணத்தான் ஆசைப்படுகிறார் என்றும்

பக்கம் 02

**அச்சுதாள் தட்டுப்பாடு காரணமாக செம்மணி வார இதழ் மறு அறிவித்தல் வரை அச்சு வடிவில் வெளிவராது. மின்னிதழாக (e- paper) வெளிவரும். e- paper இதழ் தேவையானவர்கள் 0763983858 எனும் வட்ஸ்அப் இலக்குத்துக்கு தொடர்பு கொண்டு அதனை பெற்றுக் கொள்ள முடியும்.**

## 13ஐ நடைமுறைப்படுத்த முடியாதெனில் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது?

### கோட்டாவிற்கு முன்பாக எகிறிய சம்பந்தன்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையே முழுமையாக நடைமுறைப்படுத்த கொழும்பு அரசினால் முடியாது என்றால் ஏன் பேச்சு நாம் எமது வழியே போகிறோம் என்று அரச தலைவருடனான சந்திப்பின் ஒரு கட்டத்தில் கொதித்தார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

பேச்சின் நடுவே அரசில் தீர்வு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டபோது முதற்கட்டமாக அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர். ஆனால் 13ஆவது திருத்தத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் சிக்கல்கள் இருக்கின்றன என்று அயலுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் தெரிவித்தனர்.

இவ்வளவு காலமும் ஆட்சியில் இருந்தவர்கள்

பக்கம் 19

## நாணய நிதியத்திடம் செல்ல தொழில்நுட்பக் குழு நியமிப்பு

பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்கு தொழில்நுட்பக் குழு ஒன்றை தற்போதைய ஆட்சி நியமிக்கவுள்ளது. அத்தோடு இதற்கு உதவியாகச் செயற்படுவதற்காக சட்ட நிறுவனம் ஒன்றின் உதவியையும் அது நாடவுள்ளது.

மிக மோசமான

பக்கம் 02



## ஐ.தே.க. சத்தியாக்கிரகம் ஒரு தொடக்கம் மட்டுமே

அதிகரித்துவரும் விலைவாசி மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குக் கண்டனம் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி வெள்ளிக்கிழமை கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டது.

இந்தப் போராட்டம் ஒரு தொடக்



கம் மட்டுமே; பொருளாதாரத்தைக் மீளக் கட்டியெழுப்புவதற்கான தேசிய கொள்கைத் திட்டம் ஒன்றை அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி உருவாக்க வலியுறுத்தி வீதிக்கு இறங்கி ஐ.தே.க. தொடர் போராட்டங்களை நடத்தும் என்று

பக்கம் 02

## பெற்றோல் விலை மீண்டும் உயர்வு



லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் வெள்ளிக் கிழமை இரவு முதல் எரி பொருட்களின் விலையை மீண்டும் உணர்த்தியுள்ளது.

49 ரூபாவால் பெற்றோல் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் மூலம் 92 ஒக்டேன் பெற்றோலின் விலை 303 ரூபாவாகவும் 95 ஒக்டேன் பெற்றோலின் விலை 305 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது.

இருப்பினும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிக்கப்படவில்லை.

## முட்டை, கோழி இறைச்சிக்கும் விரைவில் தட்டுப்பாடு வரும்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக விரைவில் முட்டை மற்றும் இறைச்சிக் கோழிக்கும் தட்டுப்பாடு ஏற்படும் என்று பண்ணையாளர்கள் எச்சரிக்கின்றனர்.

கால்நடைகளுக்குத் தேவையான உணவைத் தயாரிக்க முடியாத இக்கட்டுநிலை ஏற்பட்டுள்ளதே இதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தையில் கோழி இறைச்சியின் விலை ஆயிரத்தை நெருங்கியுள்ளது. கடந்த ஆண்டு சுமார் 450 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை தற்போது 900 ரூபா வரைக்கும் உயர்ந்துள்ளது. அதேபோன்று சராசரியாக 15 ரூபா விற்று வந்த முட்டை தற்போது 30 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கோழித் தீவனத்திற்கு ஏற்பட்டுவரும் தட்டுப்பாடு காரணமாக இந்த விலை மேலும் உயர்வ

பக்கம் 02

செம்மணி

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# வெறும் வாக்குறுதிகள் மட்டும் வேண்டாம்!

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு ஏமாற்றத்துக்குள்ளாகி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச சந்திப்பு ஒரு வழியாக நடந்தேறியிருக்கிறது. இந்தச் சந்திப்புக்கு முன்னதாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்தி நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும்படி கூட்டமைப்பால் வெளிப்படுத்தப்பட்ட சமிக்ஞை உதாசீனப்படுத்தப்பட்ட நிலையிலும் சந்திப்பில் கூட்டமைப்பினர் பங்கெடுத்துக்கொண்டனர்.

தமிழர் தரப்பில் கூட்டமைப்பினருக்கு வேறு வழியில்லை. ஒரு தீர்வை அடையவேண்டுமானால் இலங்கையின் ஆட்சியாளர்களுடன் பேசியே ஆகவேண்டும். அது தவிர்க்க முடியாதது. அதேநேரம் தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் தொடர்பில் கடந்த காலங்களில் காட்டிவந்த வெறுப்பு மற்றும் இனவாத வெளிப்பாடுகளின் விளைவாக எடுத்த எடுப்பில் அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதும் சாத்தியமானதாக இருக்கவில்லை.

தற்போது நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்தியா, அமெரிக்கா, சீனா என்று எல்லா நாடுகளிடமும் கையேந்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் ஆட்சியாளர்கள் சிக்கிக்கொண்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை நடத்தவேண்டிய ஒரு கட்டத்திற்கு அரச தலைவர் வந்திருக்கிறார்.

ஒரே நேரத்தில் பல முனைகளில் முரண்பாடுகளைத் தொடர்ந்தபடி தற்போதைய சிக்கலில் இருந்து மீள முடியாது என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளனர். ஒரு புறத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நெருக்கடி, மற்றொரு புறத்தில் இந்தியா அமெரிக்கா ஆகிய நாடுகளின் சீனாவிற்கு எதிரான நிலைப்பாட்டினால் ஏற்படும் அழுத்தம் ஆகியவற்றுக்கு மத்தியில் தமிழர்களுடனும் முரண்பாட்டை வளர்த்துச் செல்வது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்கும் செயல் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டுள்ளதாலேயே இப்போது இறங்கி வந்திருக்கிறார்கள் கூட்டமைப்புடனான சந்திப்புக்கு.

தமிழர்கள் முன்புள்ள சிக்கல் என்னவென்றால் இந்தத் தருணத்திலாவது ஆட்சியாளர்கள் உண்மையான இதய சுத்தியுடன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வந்திருக்கிறார்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத நிலை. வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் இருந்து எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

அரசியல் கைதிகள் விடயம், காணாமற்போனவர்கள் விடயம், பயங்கரவாதத் தடைச் சட்ட விவகாரம், உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை, காணி சுவீகரிப்பு நிறுத்தம் போன்றவற்றில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவால் கூட்டமைப்பினருக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது போன்ற பல வாக்குறுதிகள் பதவிகளில் இருந்த ஆட்சியாளர்களால் பல தடவைகள் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவை நிறைவேற்றப்பட்டதில்லை. எனவே தற்போது கோட்டாபய வழங்கியிருக்கும் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அந்தச் சந்தேகம் எழுவதற்கான காரணம் இந்த வாக்குறுதிகள் எப்போது நிறைவேற்றப்படும் என்பதற்கான காலக்கெடு எதுவும் குறிப்பிடப்படவில்லை. அத்தோடு இரண்டு மாதங்களில் வரவுள்ள புதிய அரசமைப்பு வரைபு தொடர்பான தமிழ் மொழிபெயர்ப்பு கைகளில் கிடைத்த பின்னர் அது தொடர்பில் ஆராயலாம் என்று கூறப்பட்டுள்ளதே தவிர அடுத்தகட்டப் பேச்சுக்கான திகதியோ கால வரையறையோ தீர்மானிக்கப்படவில்லை.

நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான உத்தியாக தமிழர்களுடனான பேச்சு பயன்படுத்தப்படுமாக இருந்தால் இந்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்படும் என்பது நிச்சயம். அரசு பன்னாட்டு அழுத்தங்களில் இருந்து தப்புவதற்காகவும் தற்போதைய நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்காகவுமே தமிழர்களுடன் பேசுகின்றது என்கிற சந்தேகம் கணிசமான தமிழர்கள் மத்தியில் உண்டு. அவர்களிடம் மட்டுமல்ல அரச தலைவருடன் பேச்சு நடத்திய கூட்டமைப்பிற்குள்ளேயேகூட உண்டு. அதனால்தான் ரெலோ இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

காலத்தைக் கடத்தவும் நெருக்கடியிலிருந்து தப்பவுமே தமிழர்களுடனான பேச்சு பயன்படுத்தப்படுமாக இருந்தால் இந்த நாடு தொடர்ந்தும் பேரழிவை நோக்கிப் பயணிப்பதைத் தடுக்க முடியாது. எனவே இனியாவது சிங்கள ஆட்சியாளர்கள் இதய சுத்தியுடன் இனப் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும். அதற்கு முதற்கட்டமாக வழங்கிய வாக்குறுதிகளை விரைவில் - ஒரு சில மாதங்களுக்குள் - நிறைவேற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

## பேச்சு சுமூகம்...

சம்பந்தன் கூட்டத்தில் வலியுறுத்தினார் என்றும் அரச தலைவர் செயலகம் தெரிவித்தது.

புதிய அரசமைப்பு வரைவின் தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பு கிடைத்த பின்னர் அது பற்றிக் கலந்துரையாடுவது என்றும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதியம் தொடர்பாகவும் மேலும் கலந்துரையாடப்பட்டதாகவும் செயலகத்தின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன், புதிய அரசமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் கூட்டமைப்பினர் குறியாக இருந்தனர் என்றார்.

புதிய அரசமைப்பு வரைவின் மொழிபெயர்ப்பு இன்னும் இரண்டு மாதங்களில் எமக்குக் கிடைக்கும் என்று அயலுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அது கிடைத்தவுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பாகப் பேச்சு நடத்தப்படும் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு காணப்படும் வரையில் உடனடியாகச் செயற்படுத்தப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது என்றும் அவர் கூறினார். அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் அரச தலைவர் நேரடியாகத் தலையிடுவார், இது பற்றி நீதி அமைச்சர் என்னுடன் கலந்துரையாடுவார், திருத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை வேகமாக முன்னெடுக்கப்படும்.

வடக்கு கிழக்கில் படைத்துறைத் தேவைக்கென இனி எந்தவொரு நிலமும் கையகப்படுத்தப்படாது என்றும் உத்தரவாதம் தரப்பட்டுள்ளது. பிரதேச மற்றும் மாவட்ட எல்லைகளில் உடனடியாக மாற்றங்கள் கொண்டுவரப்படமாட்டாது, அது தொடர்பில் தற்போது நடந்து வரும் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்படும், எம்முடன் பேசியே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும், நீண்ட காலமாக விவசாயம் செய்யும் காணிகளில் விவசாய நடவடிக்கைகளுக்குத் தடை வராது, இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் விதத்திலான குடியேற்றங்கள் நிறுத்தப்படும், காணாமற்போனவர்களின் குடும்பங்களின் வாழ்வாதார உதவியாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவேண்டும் என்று கேட்டிருந்தோம், இது காணாமற்போனோருக்கான கொடுப்பனவு அல்ல என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தோம், அதனை ஏற்றுக்கொண்டனர், அத்தோடு காணாமற்போன ஒவ்வொருவருக்கும் என்ன நடந்தது என்று தெளிவான விசாரணை நடத்தப்படும் என்று அரச தலைவரால் உறுதியளிக்கப்பட்டது, வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்திக்காக ஒரு நிதியம் உருவாக்கப்படும் அதற்குப் புலம்பெயர் மக்களின் நிதிகள் வரவேற்கப்படும் என்றும் இணக்கம் காணப்பட்டது - என்றார் சுமந்திரன்.

இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதாக அரச தலைவர் வாக்குறுதி வழங்கியிருந்தாரே தவிர, அதற்கான கால வரையறையோ திட்டமோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. பேச்சுக்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது தொடர்வான வழி வரைபடங்கள் எவையும்கூட உருவாக்கப்படவில்லை. அரச தலைவருக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான அடுத்த சந்திப்புக்குத் திகதிகூட தீர்மானிக்கப்படவில்லை.

சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மிகவும் மோசமான வரலாற்றைக் கொண்டிருக்கும் நிலையில் இந்தப் பேச்சுக்களின் அடைவும் மீண்டும் வாக்குறுதிகளைப் பெற்றதாக மட்டுமே முடிந்தது.

சந்திப்பில் அரச தலைவர், தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, அயலுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நீதி அமைச்சர் அலி சபாரி, அமைச்சர் சாமல் ராஜபக்ச, அரச தலைவரின் செயலாளர் காமினி சேனாரத், அரச தலைவரின் ஆலோசகர் லலித் வீரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். சிறீதரன், சாணாக்கியன் ராஜபுத்திரன், தவராசா கலையரசன், எஸ்.வினோ நோகராத லிங்கம், த.சித்தார்த்தன், தமிழர் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## முட்டை...

டைவதுடன் முட்டை மற்றும் கோழி இறைச்சிக்குத் தட்டுப்பாடும் ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

தீவனத்திற்குத் தேவையான மூலப் பொருட்கள் வெளிநாடுகளில் இருந்தே பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படுகின்றது. கடந்த இரண்டு மாதங்களாக மூலப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படவில்லை. அரசிடம் போதிய டொலர் இல்லாத காரணத்தாலேயே இந்த நிலை ஏற்பட்டது என்று அஜித் குணசேகர தெரிவித்தார். இலங்கை முழுவதற்குமான கோழிப் பண்ணை உரிமையாளர்கள் அமைப்பின் தலைவர் அவர்.

சாதாரணமாகவே வெப்பம் உயர்வான காலங்களில் கோழி முட்டை உற்பத்தி 40 சதவீதத்தால் குறையும். இந்தத் தடவை அதனோடு தீவனம் இன்மையும் இணைந்து பெரும் நாசத்தை இந்தத் தொழிற்துறையில் ஏற்படுத்தப்போன்றது என்றும் பண்ணையாளர்கள் எச்சரிக்கின்றனர்.

## ஐ.தே.க. ...

கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

முன்னதாக கொழும்பு கைட் பார்க்கில் சத்தியாக்கிரகப் போராட்டம் பிற்பகல் 3 மணி முதல் இடம்பெற்றது. டார்லி வீதி, கங்காராம சந்தி, விகாரமா தேவி பூங்கா ஆகிய இடங்களில் இருந்து மூன்று அணிகளாகப் புறப்பட்டு வந்த கட்சியின் ஆதரவாளர்கள் கைட் பார்க்கில் ஒன்று திரண்டு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

கட்சித் தலைவர்களும் தொண்டர்களோடு தொண்டர்களாகத் தரையில் அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாட்டாலி சம்பிக்க ரணவக்கவின் 43 ஆவது படையணியைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டார்கள். ஆட்சியில் உள்ள பொது ஜன பெரமுனவிற்கு எதிரான கூட்டு எதிர்க்கட்சியை உருவாக்கும் நோக்கத்தோடுதான் தாம் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர் என்று படையணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கரு பரணவிதான தெரிவித்தார்.

## நாணய...

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ள இலங்கை, இறுதியில் வேறு வழியின்றி பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாடுவது என்று முடிவு செய்திருக்கின்றது. முன்னதாக எத்தகைய நிலைவரினும் நாணய நிதியத்திடம் செல்லமாட்டோம் என்று ஆட்சியாளர்கள் சூளுரைத்து வந்தனர். அதிலிருந்து பின்வாங்கி தற்போது நாணய நிதியத்திடம் செல்வது என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது.

"நாணய நிதியத்திடம் செல்வது என்ற கொள்ளை முடிவை எடுத்திருக்கின்றோம். அதற்கு எமக்கொரு தொழில்நுட்பக் குழு தேவையாக இருக்கின்றது" என்று கொழும்பில் பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன.

அத்தோடு நீண்ட கால நோக்கில் இது போன்ற விடயங்களைக் கையாள்வதற்காக சட்ட நிறுவனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளும் முடிவும் எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# மீண்டும் அகதிகளாகும் தமிழர்கள்

## தமிழ்நாட்டில் இம்முறை சிறைகளில் அடைப்பு

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை சந்தித்து வரும் இலங்கையில் இருந்து தமிழர்கள் சட்டத்துக்குப் புறம்பாக மீண்டும் அகதிகளாகத் தமிழ்நாட்டுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். கடல்வழியில் உயிரைப் பணயம் வைத்து படகுகளில் வரும் இவர்களை இப்போதுள்ள சட்ட நடைமுறையின்படி, சிறையில் அடைக்க ராமேசுவரம் நீதிமன்றம் உத்தரவிட்டு வரும் நிலையில், இந்தப் பிரச்சினையை தமிழக அரசு எப்படி அணுகப்போகிறது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

> **இலங்கையில் 1983இல் உள்நாட்டுப் போர் தொடங்கிய காலக்கட்டத்திலிருந்தே அகதிகளாக தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வருவது தொடங்கியது. அப்படி வந்தவர்கள் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். ஆனால், 2012 இறுதியில் இருந்து இலங்கையில் இருந்து அகதிகளாக வருபவர்கள் சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்**

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதியிலிருந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை தலா மூன்று பேர் என மொத்தம் 6 கொண்ட இரண்டு குடும்பத்தினர் அதிகளாக ஒரே படகில் தனுஷ்கோடி அருகே உள்ள நான்காம் மணல் தீடை பகுதியில் இறங்கினர். தொடர்ந்து செவ்வாய்க்கிழமை இரவு வவுனியாவிலிருந்து சிவசங்கரி (35) அவரது கணவர் அஸிம் (45) இவர்களது நான்கு குழந்தைகள் ஷாம்ளா (18), அஸிம்முதின் (15), முகம்மது (13), பூமிகா (8) மற்றும் சிவசங்கரியின் சகோதரர் சிவரத்தினம் (30), அவரது மனைவி சிந்து (27), இவர்களது இரண்டு குழந்தைகள் விஷாலினி (8), சிந்துஜா (5) என மொத்தம் 10 பேர் ஒரு ஃபைபர் படகில் தனுஷ்கோடி வந்து சேர்ந்தனர்.



**உயிரை பணயம் வைத்து பயணம்**

இந்த 10 பேரும் தலைமன்னாரில் இருந்து திங்கட்கிழமை அதிகாலை புறப்பட்டு நடுக்கடலில் படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக உணவு, தண்ணீர் இன்றி சுமார் ஒன்றரை நாட்களாக குழந்தைகளுடன் நடுக்கடலில் தத்தளித்தளித்துள்ளனர். பின்னர் ஒருவாறு இயந்திரத்தைச் சரி செய்து தனுஷ்கோடியின் வடக்கு மீன்பிடி இறங்குதளத்தில் செவ்வாய்க்கிழமை இரவு வந்து இறங்கினர் என்று அதிகாரிகளின் விசாரணையின்போது தெரிவித்தனர்.

செவ்வாய்கிழமை அதிகாலை தனுஷ்கோடி நான்காம் மணல் தீடையில் வந்திறங்கிய 6 பேரும் மண்டபம் மெரைன் காவல்துறையினரால் பாஸ்போர்ட் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து புதன்கிழமை ராமேசுவரம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட் டனர். அவர்களை 06.04.2022 வரை நீதிமன்றக் காவலில் புழல் மத்திய சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்திரவிட்டது.

**சிறையில் அடைக்க உத்தரவு**

இதனைத் தொடர்ந்து 6 பேர்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கஜேந்திரனை (24) புழல் மத்திய சிறைக்கும், கஜேந்திரனின் மனைவி மேரி கிளாரி (24) இவர்களது நான்கு மாத குழந்தை ஆகியோரை புழல் பெண்கள் சிறைக்கும். மன்னார் மாவட்டம் சிலாபத்தை சேர்ந்த தியோரி (28). அவரது இளைய மகன் மோசஸ் (4) புழல் பெண்கள் சிறைக்கும் கொண்டு செலப்பட்டனர். மற்றொரு 9 வயது குழந்தையான எஸ்தர் வேலூர் மாவட்டம், அறச்சலூர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் தியோரியின் அம்மாவான சித்ரா என்பவரிடம் ஒப்படைக்கப்பட உள்ளார். மேலும், வவுனியாவிலிருந்து செவ்வாய்கிழமை இரவு வந்த 10 அகதிகள் தற்காலிகமாக மண்டபம் அகதிகள் முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் 1983இல் உள்நாட்டுப் போர் தொடங்கிய காலக்கட்டத்திலிருந்தே அகதிகளாக தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வருவது தொடங்கியது. அப்படி வந்தவர்கள் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். ஆனால், 2012 இறுதியில் இருந்து இலங்கையில் இருந்து அகதிகளாக வருபவர்களை காவல்துறையினர் கைது செய்து பாஸ்போர்ட் ஆவணச் சட்டத்தின் கீழும், சட்ட விரோதமாக வந்ததாகவும் 2 பிரிவுகளில் வழக்குப் பதிந்து நீதிமன்றத்தின் மூலம் சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பில் அகதிகளின் குடியுரிமைக் கோரிக்கைகள் கருணையுடன் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் 2019ஆம் ஆண்டின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த இந்துக்களைப் போலத் இலங்கையிலிருந்து வந்த அவர்களுக்கு குடியுரிமை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக குழந்தைகளுடன் தங்களின் உயிரை பணயம் வைத்து படகுகளில் தமிழகத்தில் தஞ்சம் புகும் அகதிகள் சிறையில் அடைக்கப்படுவது மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது குறித்து தமிழக அரசு என்ன செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்கின்றனர்.

**முதல்வர் ஸ்டாலின் உறுதி**

இதனிடையே சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசும்போது, "இலங்கைத் தமிழர்கள் இன்றைக்கு பல துன்பங்களுக்கு, துயரங்களுக்கு ஆளாகியிருக்கக்கூடிய சூழ்நிலையில், பரிதவித்துக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் தமிழர்கள், அண்மையில் தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கக்கூடிய செய்திகளை எல்லாம் நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதுதொடர்பாக நேற்றே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, இது தொடர்பாக மத்திய அரசிடமும், அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களிடம் தொடர்புகொண்டு இதை எப்படிக் கையாள வேண்டும் என்று நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். எனவே, அதற்கொரு விடிவுகாலத்தை இந்த தமிழக அரசு ஏற்படுத்தி தரும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**இலங்கைத் தமிழ் அகதிகள் பின்புலம்**

இலங்கையில் 1983ஆம் ஆண்டு உள்நாட்டு போர் தொடங்கியதிலிருந்துதமிழர்கள் அகதிகளாக உலகம் முழுவதும் புலம்பெயரத் துவங்கினர். அது முதல் தமிழ்நாட்டுக்கு 3 லட்சத்து 4 ஆயிரத்து 269 அகதிகள் வந்துள்ளனர். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் (UNHCR), தமிழக மற்றும் இந்திய அரசின் மூலமாக சுமார் 2 லட்சத்து 12 ஆயிரம் அகதிகள் இலங்கைக்கு திரும்பி சென்றுள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி, தமிழகத்தில் உள்ள 108 முகாம்களில் 58,843 இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர். மேலும், முகாமிற்கு வெளியே உள்ள காவல் நிலையங்களில் பதிவு செய்து இலங்கை தமிழ் அகதிகள் 34, 135 பேர் தங்கியுள்ளனர். மேலும், ஒடிசாவின் மல்கன்கிரியில் உள்ள அகதி முகாமில் 54 பேர் தங்கியுள்ளனர்.

தமிழக முகாம்களில் உள்ள அகதிகளின் குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு இந்தியப் பணத்தில் ரூ. 1,500, 12 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு ரூ. 1000, 12 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு ரூ. 500 என உதவித்தொகையும், வருடாந்திர கல்வி உதவி, வீடு, மின்சாரம், குடும்பத்திற்கு மாதம் 20 கிலோ இலவச அரிசி, மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப் படுகின்றன.

முகாமிற்கு வெளியே கூலி வேலைக்குச் சென்றுவிட்டு மாலையில் முகாம்களுக்கு திரும்ப அனுமதிக்கப்படுகின்றனர். ■



# உக்ரைனின் குழந்தை அகதிகள்

**வி.அருணாசலம்**

அகதிகள் என்ற வார்த்தைப் பாவனை வரலாற்றில் மிக நீண்டகாலமாகப் பாவிக்கப்பட்டுவருகின்ற சொல். இந்தச் சொல் ஒரு மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது. வயோதிபர்கள், குழந்தைகள், இளம்வயதினர் என அனைவரும் இதில் அடக்கப்படுவது வழக்கம். ஒரு குடும்பம் அகதியாக்கப்படுவது என்பது சகல வயதுத் தரப்பினரையும், ஆண்-பெண் வேறுபாட்டையும் உள்ளடக்கியதாகும்.

21ஆம் நூற்றாண்டில் இடம்பெற்றுவரும் முதல் போர் என்ற வகையில் உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு முக்கியம் பெறும் நிலையில் ஊடகங்கள் இந்தப் போரில் புதிய சொல் அர்த்தங்களைப் பிறப்பிக்கின்றன. இது ஐரோப்பிய மண்ணில் நடக்கும் போர் என்பதால் அமெரிக்க, ஐரோப்பிய ஊடகங்கள் பல இதற்குப் புதிய பரிமாணங்களைக் காட்ட முனைகின்றன. அதில் ஒன்றுதான் 'குழந்தை அகதிகள்' விவகாரம் என்ற புதிய சொல்லாடல்.

### அமெரிக்காவின் வல்லாதிக்கம்

அமெரிக்கா அதிபர் ஜோ பைடன் ரஷ்ய அதிபர் புடினை "போர்க்குற்றவாளி" என வர்ணித்திருக்கிறார். அவ்வாறு கூறுவதற்கு அமெரிக்காவுக்கு எந்தத் தகுதியும் ஜனநாயகக் கண்ணோட்டத்திலோ, மனிதாபிமானக் கண்ணோட்டத்திலோ இல்லை. தற்போதுகூட உலகின் பல பாகங்களிலும் அமெரிக்கா தனது படைத் தளங்களை நிலைநிறுத்தியுள்ளது. தனது ஆள்புலப் பரப்பைத் தாண்டி வைத்திருக்கின்ற தளங்கள் அவை என்பதால் அமெரிக்காவின் எல்லை தாண்டிய பயங்கரவாதமாகவே இது பார்க்கப்படுகிறது.

உலகைத் தனது தேவைக்கேற்றவாறு துண்டு போடுவதற்கும் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் பலவற்றுக்குத் தூபமிடுவதற்கும் இந்தப் படைமுகாம்கள் பயன்படுகின்றன. உக்ரைனிலும் அமெரிக்க ஆதரவுபெற்ற நேட்டோவின் தளங்கள் உள்ளன. தான் நிலைகொண்டுள்ள நாடுகளிலும், அவற்றின் அயல் நாடுகளிலும் இளம் தலைவர்களைப் பதவியில் வைத்து அங்கெல்லாம் தனக்கு விருப்பமான பொம்மை ஆட்சியை நடத்துகிறது அமெரிக்கா. இதையே ஆப்கானிஸ்தானிலும் நடைமுறைப்படுத்தியது. உக்ரைனில் செலன்ஸ்கி என்ற இளம் வயது நகைச்சுவை நடிகரைத் தலைவராக்கியது அமெரிக்கா.

குழந்தை அகதிகள் பற்றிப் பேசும் அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய ஊடகங்கள் 2003-2011 வரையான காலத்தில் அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நிலைகொண்டிருந்தபோது 10 லட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் போராலும் பட்டினியாலும் இறந்ததைக் கண்டுகொள்ளவேயில்லை. சிரியாப் போரிலும் அதிக குழந்தைகள் பாதிக்கப்பட்டனர். இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரில் இஸ்ரேல் படைகள் பாலஸ்தீனக் குழந்தைகளை இலக்கு வைத்துச் சுட்டுக்கொன்ற பல சம்பவங்கள் நடந்தன. அமெரிக்காவின் நேச நாடான இஸ்ரேல் செய்த அந்தப் படுபாதகங்களை அமெரிக்கா ஒருபோதும் கண்டித்ததில்லை. தற்போது குழந்தைகளைப் புடின் கொல்கிறார், தினமும் 73ஆயிரம் குழந்தைகள் அகதிகளாக்கப்படுகின்றனர் என்று ஊடகங்கள் துருத்திக் காட்டுகின்றன.

> **குழந்தைகளைப் புடின் கொல்கிறார், தினமும் 73ஆயிரம் குழந்தைகள் அகதிகளாக்கப் படுகின்றனர் என்று ஊடகங்கள் துருத்திக் காட்டுகின்றன**

மேற்கு ஐரோப்பிய நாடுகளால் அந்தக் குழந்தைகளுக்குச் சொக்லொட் வழங்கி வரவேற்கப்படுகிறது. அதேவேளை உக்ரைனில் ரஷ்யத் துருப்புகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட டான்ஸ்பாஸ் நகரிலிருந்து 2 ஆயிரத்து 389 குழந்தைகளை ரஷ்யா கடத்திச் சென்றுள்ளது என்றும் செய்திகள் அடிபடுகின்றன. குழந்தைகள் மீது தாக்குதல், குழந்தைகளை அழிப்பதில் புடின் ஈடுபட்டிருக்கிறார் என்பதைக் காட்டுவதற்கு ஊடகங்கள் தொடர்ந்து முயன்று வருகின்றன. இதன் மூலம் ஐரோப்பிய மக்களின் கழிவிரக்கத்தை, பச்சாதாபத்தை இந்தக் குழந்தைகள் மீது திருப்பி அதை புடின் மற்றும் ரஷ்யா மீதான கோபமாக அறுவடை செய்யப்பார்க்கின்றன.

### ஐரோப்பாவில் நடக்கும் போர்

சற்றும் எதிர்பாராத தருணத்தில் புடின் போரைத் தொடங்கியிருக்கிறார். 1991இல் சோவியத் ரஷ்யா என்ற மிகப் பெரிய கட்டமைப்பை அமெரிக்கா திட்டமிட்டு உடைத்தது என்பது ரஷ்யர்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்துள்ள எண்ணமாகும். இந்தப் போர் தொடங்கப்பட்டது ஒரு மாதத்துக்கு முன்பு என்று கண்ணுக்குத் தெரிந்தாலும் 1991 இலிருந்தே இவ்வாறான ஒரு விடயம் ரஷ்யர்களால் திட்டமிடப்பட்டது என்பது கண்ணுக்குப் புலப்படாத விடயம்.

இந்தப் போரில் ரஷ்யப் படைகளுக்கு ஏற்படும் இழப்புகள், பொருளாதாரப் பின்னடைவுகள், அவர்களிடமுள்ள படை, ஆயுத வலு எனப் பல்வேறு விடயங்கள் பரீட்சிக்கப்படுகின்றன. ரஷ்யா திட்டமிட்டதற்கு மாறாகத் தனது உயர் படை அதிகாரிகள் பலர் உயர்ந்த கட்டடங்களில் ஒளித்திருந்து உக்ரைனியர்களின் சினைப்பர் தாக்குதல்களால் இறந்தனர். அதன் பின்னர் உயர்ந்த கட்டடங்களை ரஷ்யப் படைகள் தரைமட்டமாக்குகின்றன. படை வியூகங்களும் உத்திகளும் மாறும்போது அதன் அழிவுகளும் அதிகமாகவே இருக்கும்.

### அமெரிக்காவின் யாவலின்

போர் டாங்கிகளை அழிக்கக்கூடிய, தோலில் வைத்து ஏவக்கூடிய அமெரிக்காவின் யாவலின் என்ற இலகு ரக ஆயுதத்தை ஏற்கனவே மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா விற்பனை செய்திருக்கிறது (நேட்டோ நாடுகளுக்கு). இந்த ஆயுதம் ஒன்றின் விலை இலங்கை மதிப்பில் ஒரு கோடியே 30 லட்சமாகும். 1980ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இந்தத் தோள் அடக்க ஏவுகணைகள் 28 கிலோமீற்றர் தூரம் வரை சென்று தாக்கியழிக்கும் திறன் கொண்டவை. உக்ரைன் போர் தொடங்கியதும் அமெரிக்கா உக்ரைனுக்கு 20 கோடி அமெரிக்க டொலரை வழங்கியது. இந்தப் பணத்தைக் கொண்டு ஏற்கனவே மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கப்பட்ட 17 ஆயிரம் யாவலின்களை உக்ரைன் வாங்கி ரஷ்யப் படைகளின் தாங்கிகளுக்கு ஏவி வருகிறது. மேலும் போருக்காக நிதி திரட்டுவதற்காகச் சென் யாவலின் படங்களையும் வெளியிட்டுள்ளது உக்ரைன். எது எவ்வாறிருப்பினும் எந்த விலை கொடுத்தாவது மேற்கு ஐரோப்பிய நாடுகள் போரை உக்ரைனுக்குள் மட்டுப்படுத்தித் தமது

# 06

# யாருக்காக இந்த ஒப்பந்தம்

சம்யுக்தா

(கடந்த வாரத் தொடர்ச்சி)

ஒவ்வொரு சிங்களக் குடிமகனுக்கும் தாய்ப்பாலுடன் சேர்த்துத் தமிழின எதிர் ப்பு வாதம் ஊட்டி வளர்க்கப்பட்டு வந்துள்ளது. பாடவிதானங்கள், வானொலி, திரைப்படம், நாடகம், இலக்கியம், தொலைக்காட்சி, பரப் புரை மேடைகள், கருத்தரங்குகள் என்பவற் றுக்கூடாகவும் இந்த இனவாதம் நீண்ட கால மாக விசமாக ஊட்டப்பட்டது. இப்படி வளர்ந்த ஒரு குடிமகனின் பார்வையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் விட்டுக்கொடுப்புபோலத் தோன்றக் கூடும். எனவே அவர்கள் ஆத்திரப்படுவார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உண்மை அதுவல்ல. இந்த நூற்றாண்டு முழுவதும் நிகழ்ந்த போராட்டத்தை அரைகுறைத் தீர்வால் யாகக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்திய வாகனங்கள் வந்துசேரும்வரை இலங்கைப் படையினரின் வாகனங்களையே பாவிப்போம் - மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங் 31.7.1987).

இந்திய மத்திய அரசு, மாநில அரசுக் கூடாகவே இயக்கங்களை அணுகியது. கையாண்டது. இன்று மத்திய அரசின் இந்த ஒப்பந்தத்துக்கு தமிழ்நாடு மாநில அரசும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பதன் மூலம் இந்த ஒப்பந்தம் போராளிகளுக்கும் திருப்தியானது என்றே தமிழக மக்கள் நினைக்க வழியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இங்கு இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக ஈழத் தமிழர்கள் காட்டும் எதிர்ப்புகளைத் தமிழகம் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதே.

இந்திய ஆட்சியாளர்கள் ஜே.ஆர். உடன் கைகோர்த்து நிற்பினும்கூட இந்திய மக்கள், குறிப்பாகத் தமிழக மக்கள் எமது இன்னல்களைப் புரிந்துகொண்டு, எமக்காகக் குரல் கொடுப்பார்கள் என்றே நம்புகிறோம்.தமிழ் நாட்டு அரசின்



தடுத்து நிறுத்துவதற்கு, நீண்டகால நோக்கில் எம்மை அழிப்பதற்கு வகுக்கப்பட்ட ஒரு சதித் திட்டமே இந்திய - இலங்கை ஒப்பந்தம்.

தன்னை ஜே.ஆர். ஏமாற்றிவிட்டார் என்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர்தான் ராஜீவ் கூறியிருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஜே.ஆர். மட்டுல்ல ராஜீவ் காந்திகூட தமிழர்களை மூன்றாந்தரமான, கௌரவமற்ற விடுபேயர்களாகத்தான் நினைத்தார். அதனால்தான் தமிழர்களுக்கான தீர்வு தொடர்பான ஒப்பந்தத்தில் தமிழர்கைள ஒரு தரப்பாகச் சேர்த்துக்கொள்ளாமல் தான் மட்டுமே கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தம் பற்றிய எல்லாத் தகவல்களையும் மூடு மந்திரமாக வைத்துக்கொண்டு எமது விருப்பங்களுக்கு அப்பால் எமது தலைவிதியை அவர் எழுதினார். எங்கள் மீது எங்களுக்கே தெரியாத தீர்ப்பைத் திணிப்பதற்கு, நாம் என்ன விலங்குகளா? அல்லது அரசியற் பிரக்ஞையற்ற கற்கால மனிதர்களா? இல்லை! நாம் மதிப்பார்ந்த ஒரு தேசிய இனம். இந்தியா எமக்குக் கவசமாய் இருக்கும், கனரக வாகனங்களைத் தரும் என்றிருந்தோம். ஆனால் இந்த ஒப்பந்தின் மூலம் இந்தியா துரோகமிழைத்தது.

எம்மை நசுக்குவதற்கென்றே கவசவண்டிகளை எமது மண்ணில் இறக்க்கியது (இந்திய வாகனங்களை வானூர்திகள் மூலம் உடனடி

அழுத்தத்தின் மூலமே புதுடில்லி அரசு தனது கொள்கைகளை மாற்றித் தனது பெருமையை நிலைநிறுத்தவேண்டும். அதற்கான அழுத்தத்தைத் தமிழ்நாடு கொடுக்கவேண்டும்.

1962இல் சீன - இந்தியப் போரின்போது ஈழத் தமிழர்களின் கவலைகள் இந்தியாவின் பக்கமே நின்றன. அன்று தலைவராயிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், தேவையேற்படின் ஒரு தொண்டர் படையைத் திரட்டி இந்தியாவுக்கு அனுப்புவதாக அன்றை இந்தியத் தலைவர் நேருவுக்குத் தந்திமூலம் அறிவித்தார். இந்திய மக்களுக்காகக் குருதி சிந்தும் அளவுக்கு ஈழத் தமிழர்கள் தயாராய் இருந்தார்கள். அப்படிப்பட்ட மக்களுக்காக இன்று எமது விமோசனத்துக்காய் உதவிசெய்ய வேண்டியது இந்திய மக்களதும் இந்திய அரசினதும் கடமையாகும்.

தூரத்தேயிருக்கும் பாலஸ்தீனத்துக்கும் நமீபிய விடுதலைப்போருக்கும் தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்கும் அங்கீகாரமும் ஆதரவும் கொடுத்திருப்பதாகப் பெருமை பேசும் இந்தியா, இன்று அயலவர்களான நாம் நசுக்கப்படுவதற்குத் துணைபோகலாமா?

பாரத மக்கள் நீண்ட காலத்துக்கு இதைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

(முடிந்தது)

## உக்ரைனின் ...

நாடுகளுக்குள் அகலக்கால் வைக்காதவாறு பார்த்துக்கொள்வது தெரிகிறது.

**ஐ.நாவின் தீர்மானங்கள்**

இந்தப் போர் தொடர்பில் பன்னாட்டு நீதிமன்றத்தைச் சேர்ந்த 15 நீதிபதிகள் உடனடியாகப் போரை நிறுத்தவேண்டும் என்று




ரஷ்யாவைப் பணித்துள்ளனர். அதையும் மீறிச் செயற்பட்டால் ஐ.நா. பாதுகாப்புச் சபை ரஷ்யா மீது நடவடிக்கை எடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகா ரத்தை வைத்திருக்கும் அமெரிக்கா 1986 நிகரகூவா கொன்றாஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்கியபோதும் 2016இல் தென் சீனக் கடற்பகுதியில் வீட்டோ அதிகாரமுள்ள சீனா அத்துமீறியபோதும் யாரும் இப்படிக் கொந்தளிக்க வில்லை. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டி ருந்தது. இந்த நிலையில் வீட்டோ அதிகாரமுள்ள ரஷ்யா இப்போது உக்ரைன் மீது போர் நடத் துவது மட்டுமே குற்றமாகக் காட்டப்படுகின்றது. ஆனால், ஏற்கனவே அமெரிக்காவும் சீனாவும் ஐ.நா. தீர்மானங்களை மீறிய விடயம் இருப்பதால் ஐ.நா. பாதுகாப்புச் சபையால் ரஷ்யாவைக் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. அதேவேளை நேட்டோ நாடுகள் சிலவும் அமெரிக்காவும் உக்ரைனுக்கு படைத் தளவாடங்கள், நிதியுதவிகளைச் செய்வது ரஷ்யா தன்னை நியாயப்படுத்தப் போதுமானதாகவும் இருக்கப்போகிறது.

**வடதுருவ ஆக்கிரமிப்பு**

தரைக்கு அடியிலும் கடலுக்கு அடியிலும் உள்ள இயற்கை வளங்கள் அள்ளப்பட்டு வருகின்ற நிலையில் வடதுருவத்தின் பனிப்பாறைகள் மீது அமெரிக்கா, ரஷ்யா, சீனா என வீட்டோ அதிகாரமுள்ள சக்திமிக்க நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. வடதுருவம் தமக்கே சொந்தம் எனவும் அதன் அடியிலுள்ள இயற்கை வளங்கள் தமக்கே உரித்துடையன என்றும் போட்டிபோடத் தொடங்கியுள்ளன. ரஷ்யாவும் சீனாவும் வடதுருவத்தைத் தமக்குள் பங்குபோட்டுக்கொள்ளத் தயாராக இருந்தால் தற்போதுள்ள உலக ஒழுங்கு ஆசியாக் கண்டத்தைச் சார்ந்து எழுச்சிபெறுவதற்கு வாய்ப்புண்டு. இந்தச் சூழலில் டொலருக்கான உலக அங்கீகாரம் பறிக்கப்பட்டு ஆசிய நாடுகளுக்கான பொது நாணயம் அறிமுகப்படுத்தப்படலாம்.

கி.பி 15ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வந்த மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க வல்லாதிக்கம் 500 வருடங்களில் சரிந்து வருவதையே தற்போதுள்ள உலகச் சூழல் எண்பிக்கிறது.

இத்தகைய களநிலையில் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய ஊடகங்கள் புடினைத் தரம் குறைத்துக் காட்டுவதற்காக ஊடகப்போர் ஒன்றைத் தொடங்கியிருப்பதும் "குழந்தை அகதிகள்" என்று புதிய தலையங்கம் இட்டிருப்பதும் ஒரு திட்டமிட்ட செயலாகவே கொள்ளமுடியும்.

# இந்தப் போர் எல்லா நாடுகளையும் தீண்டியே தீரும்!



**இ.நாதன்**

உக்ரேன் போர் தொடங்கி ஒரு மாதம் ஆகிவிட்டது. இப்போதைக்கு இது முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. இந்தப் போரால் பெரும் இன்னலுக்கு உள்ளாகியிருப்பது உக்ரேன். மேலை நாடுகள் விதித்திருக்கும் தண்டனைத் தடைகளால் பொருளாதாரச் சிக்கலுக்கு உள்ளாகியிருப்பது ரஷ்யா. இந்தப் போர் எல்லா நாடுகளையும் தீண்டியே தீரும் என்று இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு வந்திருந்த ஆஸ்திரிய வெளியுறவு அமைச்சர் பேசியிருக்கிறார். அப்படி ஆகிவிடுமோ என்ற அச்சம் நம்மை ஆட்கொள்கிறது!

உலகம் முழுமையும் அரசியலாலும் வணிகத்தாலும் இன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எல்லா நாடுகளும் இந்தப் போரால் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்படுகின்றன. இந்தப் போரில் இந்திய அரசு நடுநிலை வகிப்பதாக அறிவித்திருக்கிறது. ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு ரஷ்யாவுக்குச் சாதகமானது என்கிறார் ஆஸ்திரிய அமைச்சர். அமெரிக்காவும், மேற்கு நாடுகளும், அமெரிக்க ஆதரவு இந்தியர்களும் அதையேதான் சொல்கிறார்கள்.

இந்தியா மட்டுமல்ல இலங்கையும் அப்படியேதான். நடுநிலை வகிப்பதாகக் காட்டிக்கொள்கிறது. ஆனால் அது மறைமுகமாக ரஷ்யாவுக்கு ஆதரவாகவே நடந்துகொள்கிறது. தேயிலை வர்த்தகத்தில் முக்கிய நாடாக ரஷ்யா இருப்பது இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. ஆனால், அதேயளவிற்கு உக்ரைனும் மேற்கு நாடுகளும் அமெரிக்காவும்கூட இலங்கையிடம் இருந்து தேயிலையை வாங்குகின்றன. எனவே வர்த்தகம் மட்டுமே இங்கு முக்கியமானது அல்ல அதையும் தாண்டிய அரசியலும் பங்கு வகிக்கின்றது.

இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றச் சொல்வதற்காகத்தான் ஆஸ்திரிய அமைச்சர் புதுடில்லி வந்திருந்தார். இந்தியா இப்போது எடுத்துவரும் நிலைப்பாடு நமது திசைவழியை அடுத்துவரும் காலங்களில் தீர்மானிக்கக் கூடியவை. ஆகவே, அதன் காரணங்களையும், பின்னணியையும், பாதிப்புகளையும் விளைவுகளையும் பரிசீலிப்பது அவசியம் ஆகிறது. இதன் தொடர்ச்சியாகவே இலங்கைக்கு அமெரிக்க கீழ் நிலைச் செயலாளர் விக்டோரியா நூலன்ட் தலைமையிலான குழுவின் பயணத்தையும் நோக்கவேண்டும். அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரஸுடன் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்த அவர், ரஷ்யாவின் போரை கடுமையான வார்த்தைகளால் வைத்தார். தொடர்ந்து இலங்கை அதற்கு ஆதரவாக இருக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார். எனவே இனி வரும் காலங்களில் நாடுகளின் உறவுகளைத் தீர்மானிப்பதில் இந்தப் போர் காத்திரமான பங்கை ஆற்றும் என்பது நிச்சயம்.

### போர் மூலம்

இந்தப் போர் மாசி மாதம் 24 அன்று தொடங்கியதாகத்தான் வரலாறு குறித்து வைக்கும். ஆனால், இதன் தொடக்கம் இரண்டாம் உலகப் போரில் இருக்கிறது.

இரண்டாம் உலகப் போர் (1939-45) உண்டாக்கிய அழிவுகள் இந்த உலகத்தில் போரை எப்போதைக்குமாக நிறுத்தியிருக்கவேண்டும். ஆனால், ஆட்சியாளர்கள் யாரும் அசோகர் அல்லரே! வெற்றியாளர்களுக்குப் பங்குகள் வேண்டியிருக்கின்றன. அவர்கள் உலகைத் துண்டு போட்டார்கள். அமெரிக்கா ஒரு துருவமும் சோவியத் ஒன்றியம் இன்னொரு துருவமும் ஆகின. இரண்டும் தத்தமது செல்வாக்குப் பகுதிகளை உருவாக்கின.

> **இந்தப் போர் மாசி மாதம் 24 அன்று தொடங்கியதாகத்தான் வரலாறு குறித்து வைக்கும். ஆனால், இதன் தொடக்கம் இரண்டாம் உலகப் போரில் இருக்கிறது.**

1949இல் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட 12 மேற்கு நாடுகளின் கூட்டமைப்பில் உருவாக்கப்பட்டது நேட்டோ (வட அட்லாந்திய ஒப்பந்த அமைப்பு -North Atlantic Treaty Organization- NATO). இது பரஸ்பரப் பாதுகாப்புக்கான படைத்துறைக் கூட்டணி. இதன் முக்கியமான நோக்கங்கள்: சோவியத் ஒன்றியத்தின் விரிவாக்கத்தைத் தடுப்பது. ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளிடையே ஒற்றுமையை வளர்ப்பது. உறுப்பு நாடுகளை யார் (சோவியத் என்று படிக்கவும்) தாக்கினாலும் ஒன்றுபட்ட எதிர்த் தாக்குதலை மேற்கொள்வது.

நேட்டோவின் உறுப்பினர் பலம் கூடிக்கொண்டே வந்தது. 1955இல் மேற்கு ஜெர்மனி நேட்டோவில் இணைந்தது. தனது செல்வாக்குப் பிரதேசமான கிழக்கு ஜெர்மனியின் வாசலில் ஆபத்து வந்துவிட்டதாக நினைத்தது சோவியத் ஒன்றியம். இதுவே 1955இல் வார்சா ஒப்பந்தமாக உருவெடுத்தது. இதுவும் ஒரு படைத்துறைக் கூட்டணி. இதில் சோவியத்துடன் கிழக்கு ஜெர்மெனி, ஹங்கேரி, பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து முதலிய அப்போதைய கிழக்கு ஐரோப்பியக் கம்யூனிஸ்ட் நாடுகள் இணைந்தன. நேட்டோவைச் பன்னாட்டு அரங்கில் படைத்துறை ரீதியாக எதிர்கொள்ள சோவியத் ஒன்றியம் உருவாக்கியதுதான் வார்சா கூட்டணி.

பனிப்போர் கூர்மையடைந்துகொண்டே வந்தது. 1979இல் சோவியத் ஒன்றியத்தின் படை ஆப்கானிஸ்தானில் நுழைந்தது. அதை ஆப்கான் முஜாகிதீன் படையினர் எதிர்த்தார்கள். அவர்களுக்கு அமெரிக்க ஆதரவு இருந்தது. இந்தப் போர் பத்தாண்டுகள் நீடித்தது. இறுதியில் தாக்குப் பிடிக்க முடியாத சோவியத், 1989இல் ஆப்கானிலிருந்து வெளியேறியது. அது சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கான தொடக்கமாக அமைந்தது.

1990இல் லெஷ் வாலேசா போலந்தில் தேர்தல் மூலமாகத் தெரிவானார். இது அங்கே சோவியத் ஆதரவு கம்யூனிஸ்ட் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது. இதே காலகட்டத்தில் பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டது, கிழக்கு ஜெர்மனி மேற்குடன் கை கோத்தது. உடன் நிகழ்வாக அது வார்சா கூட்டணியிலிருந்தும் வெளியேறியது. தொடர்ந்து ஹங்கேரி, பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா முதலிய நாடுகளும் வார்சா உடன்படிக்கையிலிருந்தும் சோவியத் ஒன்றியத்தின் பிடியிலிருந்தும் வெளியேறின.

சோவியத் ஒன்றியம் பலவீனம் அடைந்தது. அதற்கு அடுத்த ஆண்டு சோவியத் ஒன்றியத்திலிருந்த 15 மாநிலங்கள் விடுபட்டுத் தனித் தனி நாடுகளாக மாறின. சோவியத் சாம்ராஜ்ஜியம் ரஷ்யாவாகச் சுருங்கியது. பனிப்போர் முடிவுக்கு வந்தது. வார்சா கூட்டணி 1991இல் முறையாகக் கலைக்கப்பட்டது.

சோவியத் ஒன்றியத்திற்கு எதிராகக் கட்டப்பட்டதுதான் நேட்டோ கூட்டணி. நேட்டோவிற்கு எதிராகக் கட்டப்பட்டதுதான் வார்சா கூட்டணி. சோவியத் ஒன்றியம் தகர்ந்ததும், வார்சா கூட்டணி கலைக்கப்பட்டதும், நேட்டோவிற்கு அவசியல்லாமல் போயிருக்கவேண்டும். நேட்டோ கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது அப்படி நடக்கவில்லை. மாறாக நேட்டோ விரிவாகிக்கொண்டே வந்தது.

1999இல் செக் குடியரசு, ஹங்கேரி, போலந்து ஆகிய முன்னாள் சோவியத் ஆதரவு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் இணைத்துக்கொள்ளப்பட்டன. 2004இல் பல்கேரியா, ருமேனியா, ஸ்லோவாக்கியா முதலிய நாடுகள் இணைந்தன. அதே ஆண்டில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் பங்காளிகளான பால்டிக் நாடுகள் (லிதுவேனியா, எஸ்தோனியா, லாட்வியா) நேட்டோவில் இணைந்தன. இது ரஷ்யாவிற்கு ஆத்திரம் ஊட்டியது. உச்சமாக, 2008இல் ரஷ்யாவின் அண்டை நாடும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் பங்காளியுமான உக்ரேனை நேட்டோவில் இணைந்துகொள்ளுமாறு அதன் உறுப்பு நாடுகள் அழைப்பு விடுத்தன.

உக்ரேன் சோவியத் ஒன்றியக் கூட்டமைப்பில் அசௌகரியத்தோடுதான் நீடித்தது. எனினும் சோவியத்தின் தகர்ச்சிக்குப் பிறகு உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் பெரிய பிணக்கம் இல்லாமல்தான் இருந்தது. இரண்டு நாடுகளும் இனத்தால் மொழியால் நெருக்கமானவை. 2008இல் நேட்டோ உக்ரேனுக்கு நீட்டிய அழைப்பிதழ் இந்த நிலையை மாற்றியது. உக்ரேன் நேட்டோவில் இணைவதை அனுமதித்தால், அமெரிக்க, மேற்கு நாடுகளின் படைகள் ரஷ்ய எல்லையிலிருந்து சில மைல் தொலைவில் நிலைகொள்வதற்கு வழங்கும் உரிமமாக அது மாறிவிடும் என்று கருதியது ரஷ்யா. ஆகவே உக்ரேன் நேட்டோவில் இணைவதை ரஷ்யா கடுமையாக எதிர்த்து வந்தது.

மேலதிகமாக, 2014இல் உக்ரேனை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைக்கும் முயற்சிகள் தொடங்கின. இதற்கு எதிர்வினையாக உக் ரேனின் பகுதியாக இருந்த கிரிமியாவைப் பிரித்துத் தனக்கு ஆதரவான சுதந்திரப் பகுதியாக்கி இணைத்துக்கொண்டது ரஷ்யா. 2014 முதல் உக்ரேன் ஆட்சியாளர்கள் அமெரிக்க ஆதரவாளர்களாக இருந்தனர். அதாவது ரஷ்ய எதிர்ப்பாளர்களாக இருந்தனர். உக்ரேனில் ஒரு பகுதி மக்கள் ரஷ்ய மொழி பேசுகிறார்கள். உக்ரேன் மொழியும் ரஷ்ய மொழியும் நெருக்கமானவை. இவை இரண்டுமே ஆட்சி மொழிகளாக இருந்து வந்தன. 2014இல்

(15ம் பக்கம் பார்க்க)

# புலிகள் வைத்திருந்த கம்பிக்கூட்டுச் சிறை

**கமலநாதன்**

அனுர தொரகும்புற. இவர் சுயாதீனத் தொலைக்காட்சியின் செய்தியாளர். செய்தி சேகரிப்பவராக இருந்து பின்னர் போர்ச் செய்திகளைச் சேகரிப்பதற்காகப் போர் முனைக்குச் சென்றவர். வடக்குக் கிழக்கு என இரண்டு மாகாணங்களிலும் கடமையாற்றியவர். போரில் காயமடைந்தவர். இவர் தனது அனுபவங்களை வெனச என்கிற யூரியூப் தளத்தில் இவ்வாறு பதிவு செய்ததார்.

2001ஆம் ஆண்டு ஐ.ரி.என். என அழைக்கப்படும் சுயாதீன தொலைக்காட்சியின் செய்தி சேகரிப்பாளராக இருந்தேன். முதலில் படைத் தலைமையகம் வெளியிடும் செய்திகளைச் சேகரித்துத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதில் ஈடுபட்டேன். பின்னர் படையினர் நடவடிக்கையில் ஈடுபடும் பகுதிகளுக்குச் சென்று செய்தி சேகரிக்க முயன்று இறுதிப்போர் வரை பணியாற்றினேன்.

**தொப்பிகல அனுபவம்**

தொப்பிகல பகுதியில் இடம்பெற்ற படை



நடவடிக்கையின்போது நரக்கமுல்ல பகுதியில் இருந்த புலிகளின் இரும்புக்கூட்டுச் சிறையை படைத்தரப்பு கைப்பற்றியது. இந்தச் சிறைக் கூடுகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். 3 அரை அடி உயரமான நாய்க்கூடுகள்போல இருந்தன. அகலம் 2அடி அளவில் இருந்ததால் திரும்பக்கூட முடியாது. அதற்குள் ஒரு மனிதனைப்போட்டுப் பூட்டினால் அவனது முதுகெலும்பு வளைந்து 3 அரை அடிக்கு மேல் நிமிர முடியாத நிலை ஏற்படும். குந்தியிருக்கவோ நித்திரைகொள்ளவோ வாய்ப்பில்லை. படைத்தரப்பைச் சேர்ந்த சாகல பத்திரண என்பவர் இந்தச் சிறையில் பூட்டப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று படையினர் கூறினார்கள்.

இந்த முகாமுக்குச் செல்ல ஒற்றையடிப் பாதை மட்டுமே இருந்தது. அதன் இருபுறமும் புலிகள் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்திருந்தார்கள். படையினர் ஒருவர் பின் ஒருவராக மிக எச்சரிக்கையுடன் நடந்தார்கள். அவர்களுக்கிடையில் என்னையும் படப்பிடிப்பாளரையும் அனுமதித்தார்கள். நாங்கள் நடந்து சென்றபோது முன்னே சென்ற சிப்பாய் ஒருவர் காலை நடைபாதைக்கு அருகில் வைத்ததால் மிதிவெடி ஒன்று வெடித்தது. அவரது கால் சிதைந்து போனது. இவ்வாறு மிதிவெடி வெடிக்கும் சத்தம் வந்த இடத்தை நோக்கிப் புலிகள் செல் அடித்தார்கள். நாங்கள் மிக வேகமாகப் பின்வாங்கினோம். நாம் பிடிக்கும் படங்களைக் களத்தில் இருந்தே எமது தலைமையகத்துக்கு அனுப்பும் வாய்ப்பு இருக்கவில்லை. காயப்பட்டவர்களை ஏற்றவரும் உலங்கு வானூர்தியில் கொடுத்து அனுராதபுரம் அல்லது கொழும்பில் வைத்து எமது ஏனைய ஊழியர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள்.

அம்பாறையிலுள்ள பிரிவேனா ஒன்றில் (பௌத்த பிக்குகளுக்கு மதக்கல்வி புகட்டப்படும் பாடசாலை) விதாதா தொழில்நுட்ப வசதி இருந்தமையால் அங்கிருந்தும் சிலவேளைகளில் அனுப்ப முடிந்தது.

**வன்னிப் படை நடவடிக்கை**

57ஆவது 58ஆவது படையணிகளுடன் இரணை இலுப்பைக்குளம் பகுதிக்குச் சென்றேன். அங்கு படை நடவடிக்கை நடந்தபோது வெலி ஓயா ஊடாகவும் வன்னிக்குள் செல்லும் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு இடங்களிலும் செய்தி சேகரிக்கச் சென்றோம். வெலி ஓயா (மணலாறு) அடர்ந்த காட்டுப்பகுதி என்பதால் மாலை 3 மணிக்குப் பின்பு படம் பிடிப்பதில் சிரமம் இருந்தது. அந்தப் பகுதி நேரத்துக்கே இருட்டிவிடும். ஆனால் மன்னாரை அண்டிய பகுதிகள் வயல்வெளிகளாக இருந்தமையால் மாலை 6 வரைக்கும் படம் பிடிக்க முடியும். இந்தச் செய்தி சேகரிப்பு நடவடிக்கையின்போது நாங்கள் நினைத்தபடி எதையும் செய்யமுடியாது. படையினரின் அனுமதியுடனேயே எமது பணியைச் செய்யவேண்டியிருந்தது.

வெலிஓயாப் பகுதியிலிருந்து கொழும்புக்குச் செய்திகளை உடனுக்குடன் அனுப்புவதற்காக சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஓர் உபகரணத்தைப் புல்மோட்டை தொலைத் தொடர்புக் கோபுரத்திலும் திருகோணமலையிலும் பொருத்தியது. அதனூடாகப் பத்தரமுல்லைக்கு உடனுக்குடன் செய்திகளை அனுப்பும் வாய்ப்பைப் பெற்றோம். வேறு தொலைக்காட்சி நிறுவனங்களும் களத்தில் நின்றதால் யார் முந்திக்கொண்டு செய்தி அனுப்புவது என்பதில் போட்டியிருந்தது.

2008 ஆடி மாதம் 22 அன்று புலிகளின் வழங்கல் பாதை ஒன்றைக் கைப்பற்றும் நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டது. 8 பேர் கொண்ட அணி ஒன்று புலிகளின் பங்கருக்குள் புகுந்து திடீரெனத் தாக்குவது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. என்னையும் படப்பிடிப்பாளரையும் அங்கு செல்ல அனுமதித்தார்கள்.

இந்தத் தாக்குதலுக்கான முழுப்பொறுப்பையும் கேணல் கத்னாகொட மேற்கொண்டார். தாக்குதலுக்குப் பொறுப்பாகச் சுரங்கமுவ இருந்தார். எனக்குப் பயம் அல்லது வேறு நோய்கள் ஏதாவது உண்டா எனக் கேட்டார்கள். பின்னர் உருமறைப்பு ஆடை ஒன்றைத் தந்தார்கள். 8 சிப்பாய்கள் நாம் இருவர் எனப் பத்துப்பேர் தயாரானோம். கோப்ரல் விமுத்து குமார என்பவர் புலிகளின் பங்கர் பகுதிக்குச் சென்று வேவு பார்த்திருந்தார்.

அந்தப் பகுதிக்குச் செல்லும் போது விமுத்து குமார சருகுச் சத்தமில்லாமல் நடக்கவேண்டும் என்றும் பெரிய மரங்களுக்கு அடியில் மிதிவெடி மற்றும் கன்னிவெடிகள் புதைக்கப்பட்டுச் சருகால் மூடியிருப்பதால் பெரிய மரங்களுக்கு அடியில் செல்லவேண்டாம் என்றும் கூறினார். போகும்போது ஒரு மரத்தின் கீழ் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளைச் சருகுகளை ஒதுக்கிக் காட்டினார். அதைப் படம் பிடிக்குமாறு எமக்குச் சைகையில் காட்டினார். எம்மை ஒரு மரத்தடியில் நிற்குமாறு கூறினார்கள். தாக்குதல் தொடங்குவதற்கு முன்னர் ஆட்லறி, மல்டி, 81, 61 எறிகணைகளை அடித்தார்கள். காலை 10.30 மணியளவில் விமுத்து மெதுவாக செற்றில் கதைத்தார். பெண் புலிகள் அந்த பங்கர் பகுதியில் தேநீர் தயாரிப்பதில் ஈடுபடுவது தெரிந்தது. பெரிதாகக் கதைப்பதும் கேட்டது.

திடீரென படையினர் சுடத் தொடங்கினர். அந்த இடத்துக்கு வரவிருந்த புலிகளின் மேலதிக துருப்புகளை இலக்குவைத்துச் சிப்பாய்கள் கிளைமோருடன் காத்திருந்தார்கள். 15 நிமிடங்களில் புலிகளின் மேலதிக உறுப்பினர்கள் அங்கு வந்து மோட்டார் மற்றும் பல ரக சூடுகளை நடத்தினார்கள். எம்மைப் பின்வாங்கிச் செல்லுமாறு விமுக்து கூறினார்.

ஒற்றையடிப் பாதை மட்டுமே இருந்தது. அதன் இருபுறமும் புலிகள் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்திருந்தார்கள். படையினர் ஒருவர் பின் ஒருவராக மிக எச்சரிக்கையுடன் நடந்தார்கள். அவர்களுக்கிடையில் என்னையும் படப்பிடிப்பாளரையும் அனுமதித்தார்கள். நாங்கள் நடந்து சென்றபோது முன்னே சென்ற சிப்பாய் ஒருவர் காலை நடைபாதைக்கு அருகில் வைத்ததால் மிதிவெடி ஒன்று வெடித்தது



படையினர் எதிர்பார்த்தபடி புலிகளின் அணிக்கு அடிப்பதற்காகப் பொருத்தியிருந்த கிளைமோர் வெடிக்கவில்லை. பின்னர் அதுபற்றித் தேடிப்பார்த்தபோது கிளைமோரை இயக்குவதற்குப் பாவிக்கப்பட்ட வயரை எலி கடித்து அறுத்திருந்தது தெரியவந்தது. சண்டை தோல்வி என்று தெரிந்தது. 8 சிப்பாய்களில் 4 பேரைப் புலிகள் கொன்றார்கள். 2 பேரும் நாங்களும் காயங்களுடன் தப்பினோம். ■

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

## குலதெய்வ வணக்கம்

11



மிக நீண்ட காலமாகச் சுதேச மக்கள் குலதெய்வ வணக்கம் செலுத்தி வருவதென்பது தமது முன்னோர்களை நினைவுபடுத்தியே. மூதாதையர்களின் ஆத்மா தமக்குத் துணையாக இருக்கும் என்பதும் எந்தக் கட்டத்திலும் அது தீங்கிழைக்காது என்றும் தமக்கு ஏற்படவிருக்கும் துன்பங்களை முன்ன தாகவே கனவில் காட்டுவது அல்லது பணயம் ஒன்றுக்கு ஆயத்தமாகும்போது தடங்கல்களை ஏற்படுத்தி ஆபத்துகளில் இருந்து காப்பாற்றுவதுபோன்றுறில் அந்த மூதாதையர் ஆத்மாக்கள் ஈடுபடும் என்கிற நம்பிக்கை அந்த மக்க ளிடம் உண்டு.

ஒரு மனிதன் தனது மூதாதையரை வணங்க உரித்துடையவன். மாதாவும் பிதாவும் முதற் கடவுள் என்ற நிலையில் இருப்பவர்கள் என்று அவர்க ளுக்கே வணக்கத்தில் முதன்மை கொடுக்கப்படுகிறது. இதனால் தமது முன் னோர் இறந்த நாள்களாக நினைவுகூருவதும் அவர்கள் விரும்பி உண்கின்ற உணவுகளைச் சமைத்துப் படைப்பதும் வழக்கமாக இருக்கிறது. இதன் தொடர்ச்சியே இறந்த பின்னர் 8ஆம் நாள் படையல் அல்லது எட்டுச் செலவு என்ற பெயரில் இறந்தவர் விரும்பியுண்ணும் மச்சம், மாமிசம், மது வகை, பழங்கள் என எல்லாவற்றையும் படைத்து நெருங்கிய உறவுக்காரர் சேர்ந்து உண்பது. இதை உரித்துச் சோறு என்றும் அழைப்பர். பிற்காலத்தில் இந்தச் சோற்றை உண்டால் தொடக்கு ஏற்படும் என்ற நம்பிக்கைகள் எல் லாம் பிராமணர்களால் உருவாக்கப்பட்டவை.

இந்தக் குல தெய்வ வணக்க முறை பின்னர் பிராமணர்களுக்குத் தானம் கொடுப்பதாகவும் அவர்கள் அதை இறந்தவர்களிடம் சேர்ப்பிப்பார்கள் என் றும் போலியான நம்பிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன.

இறந்தவர்களை நினைத்து அவர்கள் இறந்த நாளில் உறவுகள் அனைவரும் சேர்ந்து வணங்கி அவர்களின் பெயரால் மகிழ்ந்து உண்பது என்பது தமது மூதாதையரின் கட்டுப்பாட்டில் தாம் இயங்கு வதை ஒப்பிப்பதாகும். மூதாதையரின் நினைவாக வணங்கப்படுகின்ற குலதெய்வ வணக்கமுறை பல யுகங்களைக் கடந்தும் பின்பற்றப்பட்டு வருகிறது.

---

# இலுப்பை மரம் வளர்ப்போம் வாரீர்...!




ரவீந்திரன்

அண்மையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவிலுக்குச் (சின்னபுரம்) சென்றபோது அங்குள்ள சுற்றுச்சூழல் பற்றியும் அங்கு நாட்ட வுள்ள மரங்கள் பற்றியும் தொழில்நுட்ப அலுவல ரான வைகுந்தவாசனுடன் உரையாடக் கிடைத்தது. கசூரினாக் கடற்கரையை அண்டியிருக்கும் சுட லைப் பகுதி முன்பு கழிவுகள் கொட்டப்படும் பகு தியாகவும் விழுந்த காவோலைகள் எடுத்துப் போடப்படாமலும் கிடக்கும். ஆனால் தற்போது அந்தப் பகுதியில் படைமுகாம் ஒன்று இருப்பதால் அதிகாலையிலேயே சிப்பாய்கள் அந்தச் சூழலைச் சுத்தம் செய்வதால் மிக அழகாகப் பேணப்படுகிறது என்று எனக்குக் காட்டினார். அதன் பின்னர் மரங் கள் நடுவது பற்றிக் கதைத்தபோது நான் வைகுந்த வாசனுக்குக் கூறினேன் இலுப்பை மரங்களைக் குளக்கரைகளிலும் வெட்டையான பகுதிகளிலும் நடுமாறு.

ஏற்கனவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த மிகப் பெரிய இலுப்பை மரங்கள் தேர்களுக்குச் சில்லுச் செய்வதற்காக வெட்டப்பட்ட கதையை அவருக்குக் கூறினேன். தேர்ச் சில்லுக்காகப் பெரிய இலுப்பை மரங்கள் பல வெட்டப்பட்டு தேர் செய் வதில் ஏற்பட்ட சிக்கல்களால் அந்த வெட்டப்பட்ட மரங்கள் கிடப்பில் கிடந்து பழுதடைந்த சம்பவங் களும் உண்டு.

அப்போது வைகுந்வாசன் மிகவும் முக்கியமான ஒரு கதையைக் கூறினார்.

''எங்கட கோவிலில் 5 தேர்கள் உள்ளன. எதிர் காலத்தில் அந்தத் தேர்களின் சில்லுகள் பழுதாகி னால் அதை மாற்றுவதற்குக் கஸ்ரப்படவேண்டி யேற்படும். இப்பவே இலுப்பை மரங்களை நாட்டி னால் நிழல், இலுப்பைக் கொட்டைகள் போன்ற வற்றையும் பெற முடியும்'' என்றார்.

**வெளவால்கள் நாட்டிய இலுப்பைகள்**

இயற்கையாகக் காடுகளை உருவாக்குவதில் பற வைகள், வெளவால்கள், நீரோட்டங்கள், காற்று என்று பல விடயங்கள் பங்களிப்புச் செய்தாலும் இலுப்பை விதைகளை வேறு இடங்களில் கொண்டு சென்று போடுவதில் வெளவால்களே அதிக பங்கு வகிக்கின்றன. இயற்கைக் காடுகளை மனிதன் உரு வாக்குவதில்லை. ஆனால் அவற்றை வெட்டியும் தீவைத்தும் அழிக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பிறேசிலில் பல ஆயிரம் ஹெக் டெயர் இயற்கைக் காடு காட்டுத் தீயால் அழிந் தது. இயற்கையாக ஏற்பட்ட காட்டுத்தீ என்று பலராலும் நம்பப்பட்டாலும் பிறேசில் அதிபர் அங்குள்ள பழங்குடிகளை கலைத்துவிட்டுத் தனி யார் நிறுவனம் ஒன்றுக்கு அந்த நிலத்தை விற்ப தற்காக எடுத்த குரூரமான இயற்கைக்கு எதிரான தீர்மானம் என்ற குற்றச்சாட்டும்கூட உண்டு..

**மரம் நாட்டு விழாக்கள்**

கார்த்திகை மாதத்தில் வடக்குக் கிழக்கில் மரம் நாட்டுகின்ற கலாசாரம் ஒன்றை ஏற்படுத்தியவர்கள் விடுதலைப் புலிகள். தமது பிள்ளைகளின் கல்ல றைக்கு மாவீரர் தினத்தில் வணக்கம் செலுத்தச் செல்லும் உறவுகள் எடுத்துச் செல்வதற்காக ஒரு தென்னம்பிள்ளையைக் கல்லறைக்கு அருகில் வைத்து விடுவார்கள். இது ஓர் உணர்வுபூர்வமான விடயம் என்பதாலும் வீரச்சாவடைந்த தமது பிள் ளைகளின் நினைவாக நாட்டப்பட்ட தென்னம்பிள் ளைகள் என்பதால் அவற்றை மிகக் கவனமாகப் பராமரிப்பார்கள் என்பதாலும் புலிகள் இந்த முறை யைப் பின்பற்றினார்கள். அந்த மரங்கள் தற்போது பெருமளவு தேங்காய்களைக் காய்க்கின் றன. அதுவெறும் மரம் நாட்டல் அல்ல. அதற்குக் கலா சாரத்துடன் கூடிய மரம் நாட்டலாகப் பேணப் பட்டது.

2009க்குப் பின்பான காலகட்டத்தில் படையி னரே பெருமளவு தென்னம்பிள்ளைகளை நாட்டிப் பராமரிக்கின்றனர். தமிழர் மத்தியில் இது வெறும் மரம் நாட்டு விழாவாகவும் ''நடப்பட்டது'' என்ப தால் அடுத்த வருடமும் அதே இடத்தில் மரம் நாட்டு விழா நடத்தும் விதமாக நிலம் கட்டாந்தரை யாகவே காணப்படுகின்றது.

வைகுந்தவாசன் குறிப்பிடுவதுபோல தேருள்ள எல்லாக் கோவில்களுக்கும் சொந்தமான நிலங்க ளில் இலுப்பை மரங்களை நாட்டும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கினால் பத்து வருட காலத்தில் இலுப்பை மரத்தால் ஒரு பசுமையை கோவிற் சூழலில் ஏற்படுத்த முடியும். இதை ஒரு விழாவாக அல்லாமல் ஒரு கலாசார விழுமியமாக ஈழத்துச் சிதம்பர நிர்வாகம் தொடக்கி வைப்பது சிறந்த தொடக்கமாக இருக்கும்.

# சிறைக்குள்... 49



தர்மராசா

## "தேசியத் தலைவராணை..." என்று சத்தியம் செய்யும் கைதிகள்

சிறைகளில் கைதிகள் மத்தியில் ஏதாவது வாக்குவாதம் எழும்போது தமது தரப்பு வாதத்தை நம்ப வைப்பதற்காக - அதன் உண்மைத் தன்மையைச் சொல்வதற்காகப் பல சத்தியங்களைச் செய்வார்கள். 'கடவுளாணை, அம்மாவாணை, பிள்ளைகளாணை' என்றெல்லாம் சத்தியம் செய்கின்ற முறை இருந்தது. அந்த முறை மாறி "தேசியத் தலைவராணை" என்று சத்தியம் செய்கிற முறையைக்கூட சிறையில் காண முடிந்திருக்கிறது. இது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இளைஞர்கள் மத்தியில் ஒரு கடவுள் மாதிரி மதிக்கப்பட்டதை வெளிக்காட்டியது.

**2.12.2001** அன்று பூசாவில் லொக்கேசன் மாற்றினார்கள் (சிறை அறைகளுக்குள் அடைக்கப்பட்டிருந்த கைதிகளை வேறு வேறு அறைகளில் மாற்றிப் போடுவது). மாவீரர் தினத்தில் தீபம் ஏற்றி மாவீரர் பாடலை இசைத்ததற்காக ஏதாவது தண்டனை தருவார்கள் என எல்லோரும் எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இந்த லொக்கேசன் மாற்றியதை அதனோர் அங்கமாகக் கைதிகள் கருதினார்கள். புதிதாக மாற்றப்பட்ட அறையில் மாஸ்ரர், நான், ராமகிருஷ்ணன் என்ற ஒருவர், மதன் ஆகியோர் இருந்தோம். இவர்களுள் மதனுடன் ஏற்கனவே சிறைக்குள் இருந்திருக்கிறேன். ஏனைய புதிய நண்பர்களும் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்படக்கூடியவர்களாக இருந்தனர்.

ராமகிருஷ்ணன் **5** வருடங்களையும், மாஸ்ரர் **3** வருடங்களையும் சிறைக்குள் கழித்திருந்தார்கள். நானும் மதனும் குறைந்த காலச் சிறை அனுபவம் உள்ளவர்கள்.

---

**மாவீரர் தினத்தில் தீபம் ஏற்றி மாவீரர் பாடலை இசைத்ததற்காக ஏதாவது தண்டனை தருவார்கள் என எல்லோரும் எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.**

---

சிறைக்குள் எத்தனை வருடங்கள் இருந்தாலும் அங்கு கைதிகளாக இருக்கின்ற மனிதர்களை முழுமையாகப் புரிந்துவிட முடியாது. எல்லோரும் மன உளைச்சலுடன் இருப்பதால் எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த விடயத்தில் முரண்படுவார்கள் என்பது அனுமானிக்க முடியாத ஒன்று. வெளி வாழ்க் கையில் விபத்துகள் எப்போதாவது ஏற்படு வதுண்டு ஆனால் சிறைக்குள்ளோ எல்லா நேரங்களிலும் விபத்துகள் நிகழ வாய்ப்பிருந்தது.

பூசாவில் சாதகம் கணிக்கக்கூடிய, கைரேகை பார்க்கக்கூடிய, டம்ளர் ரோக் எனப்படும் ஆவிகளுடன் பேசுகின்ற விடயங்களில் பலர் ஈடுபட்டிருந்தார்கள். எல்லோரிடமும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எனது விடுதலை பற்றிக் கேட்டிருக்கிறேன். மட்டக்களப்பைச் சேர்ந்த கமலநாதன் என்ற ஆசிரியர் எனது விடுதலை பற்றிச் சரியாகக் கணித்துக் கூறினார். அவரை நான் போகம்பரைச் சிறையில் ஏற்கனவே சந்தித்திருக்கிறேன். போகம்பரைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்களப் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஒருவரது சாதகத்தை அவர் கணித்து அவருக்கு மிகக் கூடாத நாள் தொடங்குகின்ற தினத்தையும் அந்தக் காலம் முடிகின்ற நாளையும் குறித்துக் கொடுத்தார். அந்த படை அதிகாரி கமலநாதன் மாஸ்ரரின் திறமையைக் கண்டு அதிர்ந்துபோனார். ஏனெனின் அவர் கணித்துக்கொடுத்த குறிப்பிட்ட **2** தினங்களில் முதல் தினத்தன்று தான் கைது செய்யப்பட்டார் என்றும் கெட்டகாலம் முடிகின்ற திகதி என்று கமலநாதன் மாஸ்ரர் குறிப்பிட்ட திகதியில் அவருக்குத் தண்டனை முடிந்து விடுதலை செய்யப்படவிருக்கிறார் என்றும் கூறினார். கமலநாதன் மாஸ்ரரின் திறமையை மெய்ச்சியதுடன் சாதகம் பார்ப்பது தொடர்பாகச் சிங்கள, ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட அரிய புத்தகங்கள் பலவற்றைத் தனது வீட்டிலிருந்து எடுத்து வந்து அன்பளிப்பாகவும் வழங்கியிருந்தார்.



எனது விடுதலை பற்றிக் கமலநாதன் மாஸ்ரர் குறிப்பிட்டிருந்த காலப்பகுதியை முழுமையாக நான் நம்பியிருக்கவில்லை (அவர் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்னதாக விடுதலையாகிவிட முடியும் என்று நம்பினேன்). ஆனாலும் அவர் குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே எனது விடுதலை சாத்தியப்பட்டது.

சிறைக்குள் இருக்கும்போது விரைவில் நாம் விடுதலையாவோம் என்ற ஒரு நம்பிக்கை இருக்கவேண்டும். அது அறிவுபூர்வமானதா இல்லையா என்பதல்ல தேவை. மனதைத் திடமாக வைத்துக்கொள்வதற்கு இந்த அணுகுமுறைதான் அவசியமானது.

(தொடரும்)

# காதலின் துயரம்



கதே

தமிழில்: எம்.கோபாலகிருஷ்ணன்

இந்தச் சொற்களின் ஆற்றல் அனைத்தும் துக்கமுற்ற அவனது சுயகட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்தது. கதியற்றுப் போனவனாய் அவன் லாதேயின் பாதங்களில் வீழ்ந்தான். அவள் கைகளைப் பற்றினான். கண்களிலும் நெற்றியிலும் வைத்து அழுத்திக்கொண்டான். அதிர்ச்சிகரமான அவனது துயர முடிவைக் குறித்த உள்ளுணர்வு அவளது மனத்தில் பளிச்சிட்டது. அவளது மூளை குழம்பியது. அவனது கைகளை இறுகப் பற்றித் தன் மார்பின் மீது வைத்து அழுத்திக்கொண்டாள். துயரப் பெருமூச்சுடன் அவனைத் தழுவினாள். தகிக்கும் இருவரது கன்னங்களும் உரசின. உலகத்தை மறந்தனர். அவளைக் கைகளால் பின்னித் தன் மார்போடு இறுகத் தழுவி நடுங்கித் துடித்த அவளது இதழ்களில் ஆவேசத்துடன் முத்தமிட்டான். 'வெர்தர்!' தவிக்கும் குரலுடன் கத்திய அவள் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். 'வெர்தர்!' பலவீனமான கைகளால் அவனைத் தன் மார்பிலிருந்து விலக்கித் தள்ள முயன்றாள். 'வெர்தர்!' கௌரவமான அமைதியான குரலில் அழுதாள். அவன் தடுக்கவில்லை.

தன் அணைப்பிலிருந்து அவளை விடுவித்தான். வெறிபிடித்தவன் போல் அவள் காலில் விழுந்தான். அவசரமாக விலகிக்கொண்ட அவள், காதலுக்கும் கோபத்துக்குமிடையே தவித்தவளாய், பதற்றத்துடனும் குழப்பத்துடனும் சொன்னாள், 'இதுதான் கடைசி வெர்தர்! இனி நீ என்னைப் பார்க்கக்கூடாது.' உவகையையே அறிந்திராத அவன் மீது காதலின் துயரம் கனக்கும் அவள் பார்வை தவித்தது.

பிறகு அடுத்த அறைக்கு ஓடிய அவள் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டுக்கொண்டாள். அவளைப் பிடித்து நிறுத்தத் துணிவற்றவனாய் அவளை நோக்கிக் கைகளை விரித்து நின்றான். அரைமணி நேரம் வரையிலும் சோபாவில் தலையை வைத்துக்கொண்டு தரையில் கிடந்தவனை அந்தச் சத்தம் உலுக்கி எழுப்பியது. இரவு உணவுக்காக மேசையை ஒழுங்கு செய்ய வந்த பணிப்பெண்ணின் குரல்தான் அது. எழுந்து அறையில் அங்குமிங்குமாக நடந்தான். அறையில் தான் மட்டும் தனியாக இருப்பதை அறிந்து, தாழிட்ட அறையின் கதவருகில் சென்று மெல்லிய குரலில் அழைத்தான். 'லாதே! லாதே! கடைசியாக ஒரே ஒரு வார்த்தை மட்டும். எனக்கு விடை கொடுத்து அனுப்பு!' அவள் மௌனமாக இருந்தாள். அவன் காத்திருந்தான். கெஞ்சினான். நெடுநேரம் காத்திருந்தான். பிறகு விருப்பமில்லாமல், 'லாதே! போய்வருகிறேன் லாதே! இனி ஒருபோதும் வரமாட்டேன். போய்வருகிறேன்' என்று கதறி அழுதபடியே அங்கிருந்து புறப்பட்டான்.

தகிக்கும் இருவரது கன்னங்களும் உரசின. உலகத்தை மறந்தனர். அவளைக் கைகளால் பின்னித் தன் மார்போடு இறுகத் தழுவி நடுங்கித் துடித்த அவளது இதழ்களில் ஆவேசத்துடன் முத்தமிட்டான்

நகரத்தின் நுழைவாயிலுக்குத் திரும்பி வந்தான். அவனை நன்கு தெரிந்திருந்த காவலாளிகள் எதுவும் கேட்காமல் அவனை உள்ளே அனுமதித்தனர். பனியும் மழையுமாய்த் தூறிக்கொண்டிருந்தது. தனது அறைக்கதவை அவன் தட்டியபோது மணி பதினொன்றாகியிருந்தது. வெர்தர் வீடு திரும்பியபோது தொப்பி இல்லாமல் வந்ததை அவனுடைய வேலைக்காரன் கவனித்தான். எதுவும் சொல்ல தைரியம் இல்லாதவனாய் அவன் வெர்தரின் உடைகளைக் களைய உதவினான். எல்லாமே நனைந்திருந்தன. அந்தத் தொப்பி ஆழமான பள்ளத்தாக்கின் அருகிலிருந்த ஒரு மலைச் சரிவில் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. மழை ஈரம் மிக்க அந்த இரவில், தலை குப்புற விழாமல் அவன் எப்படி அந்தச் சரிவில் ஏறினான் என்றே புரிந்துகொள்ளமுடியவில்லை.

படுக்கையில் விழுந்து பல மணி நேரம் தூங்கினான். மறுநாள் காலையில், அவனது அழைப்பிற்குப் பிறகு, காபியுடன் அறைக்குள் வந்த வேலைக்காரன் அவன் எழுதிக்கொண்டிருப்பதைக் கண்டான். லாதேவுக்கு எழுதத் தொடங்கிய கடிதத்தைத் தொடர்ந்து எழுதியிருக்கிறான்.

'கடைசித் தடவையாக இன்று கண்விழிக்கிறேன். ஐயோ, இனி இந்தக் கண்கள் சூரியனைக் காணப்போவதில்லை. இருண்ட பனிமூட்டமான பொழுதில் அவன் ஒளிந்திருக்கிறான். இயற்கையே, நீ துக்கம் பேணிக்கொள்! உன் மகன், உன் நண்பன், உன் காதலன் தன் முடிவை நெருங்கிவிட்டான். லாதே, 'இதுதான் என் இறுதிப் பகல்!' என்று சொல்லும் இந்த உணர்வை எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது, ஆனாலும் அந்திப் பொழுதில் கண்ட கனவைப் போன்றது என்று சொல்லலாம். 'இறுதி' என்ற இந்தச் சொல்லைப் பற்றி எனக்கு எந்த அனுபவமும் இல்லை. இப்போது நான் உயிர்ப்புடன் இங்கே இருக்கிறேன் இல்லையா? நாளை நான் அசையாது இந்த மண்ணில் கிடத்தப்பட்டிருப்பேன். 'இறந்துபோவது' என்பதற்கு என்ன பொருள்? மரணத்தைப் பற்றிப் பேசும்போது நாம் கனவுதான் காண்கிறோம். பல பேர் மரிக்கும் தருணத்தை நான் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் மனித இனம் தனது இருப்பின் தொடக்கத்தையும் முடிவையும் அறிந்துகொள்ள முடியாதபடி ஓர் எல்லைக்குட்பட்டது என்றே தோன்றுகிறது. இருந்தும் என்னுடையதும் உன்னுடையதும் அப்படியானதுதானா? நாம் இருவரும் காதலர்களாயிருந்து மறுகணம் பிரிக்கப்பட்டுவிட்டோம். பிரிந்துவிட்டோம். ஒருவேளை, இனி சந்திக்காமலே போய்விடுவோம். இல்லை லாதே, அப்படி இல்லை. நான் எப்படி இறக்க முடியும்? நீ எப்படி இறக்க முடியும்? நாம் உயிரோடுதானே இருக்கிறோம். இறப்பது என்று சொன்னால் அதற்கென்ன அர்த்தம்? அதுவும் வெறும் ஒரு சொல்தான். என் இதயத்தில் எந்த எதிரொலியையும் ஏற்படுத்தாத ஒரு வெற்றொலிதான். லாதே, உயிரற்றுப் போனால் இருண்டு இறுகிப்போன குறுகிய குழியில் புதைக்கப்படுவோம். யாருடைய துணையுமில்லாத என் பள்ளிப் பருவத்தில் எனக்கு எல்லாமுமாக ஒருத்தி இருந்தாள். அவள் இறந்து போனாள். அவள் உடலைத் தொடர்ந்து போன நான் அவளது புதைகுழிக்கு அருகில் நின்றேன். சவப்பெட்டியைக் குழிக்குள் இறக்கிய பின் அதைச் சுற்றிக் கட்டியிருந்த கயிற்றை மேலே இழுத்தார்கள். மண்வெட்டியால் மண்ணை அள்ளிப் பெட்டியின் மீது போட்டபோது அச்சமூட்டும் அந்தப் பெட்டி மெல்லிய ஓசையை எழுப்பியது. அந்தப் பெட்டி முழுக்க மண்ணால் மூடப்படும் வரையிலும் அந்த ஓசை மேலும் மேலும் சன்னமாகக் கேட்டுக்கொண்டேயிருந்தது. புதைகுழிக்குப் பக்கத்தில் நான் நெகிழ்ந்துபோனவனாய், உலுக்கப்பட்டவனாய், இதயம் வெடிக்க உறைந்து நின்றிருந்தேன். ஆனால் எனக்கு என்னவானது என்று அப்போது நான் அறிந்திருக்கவில்லை. இனி என்ன நடக்கப் போகிறது என்றும் எனக்குத் தெரியாது. மரணம். புதைகுழி. இந்தச் சொற்களெல்லாம் எனக்குப் புரியவில்லை.

என்னை மன்னித்துவிடு. நேற்றைய நாள்! அதுதான் என் வாழ்வின் இறுதித் தருணமாக இருக்கும். ஓ என் தேவதையே! முதன்முதலாக, என் இதயத்தின் ஆழத்தில் முதன்முதலாக, உறுதியாக, ஆனந்தமான பரவச உணர்வு ஒளிவிட்டது. அவள் என்னை நேசிக்கிறாள். அவள் என்னை நேசிக்கிறாள். உன் இதழ்களிலிருந்து கிளர்ந்தெழுந்த அந்தப் புனிதமான காதல் இதோ இன்னும் என் உதடுகளில் எரிந்துகொண்டிருக்கிறது. என் இதயத்தில் புத்துணர்வும் பரவசமும்மிக்க ஒரு வெம்மை. மன்னித்துவிடு! என்னை மன்னித்து விடு!

மனமார்ந்த உன் முதல் பார்வையிலிருந்தும், முதன்முதலில் கை குலுக்கியபோது அதிலிருந்த அழுத்தத்திலிருந்தும் நீ என்னை விரும்புகிறாய் என்பதை நான் அறிந்திருந்தேன். இருந்தும் மீண்டும் இங்கிருந்து சில நாட்கள் வெளியில் இருந்த வேளையிலும், உன்னருகில் ஆல்பர்ட்டைப் பார்த்தபோதும் பெருத்த சந்தேகங்களால் நம்பிக்கை இழந்திருந்தேன்.

ஒரு மோசமான விருந்தின்போது என்னிடம் பேச முடியாமல், என்னுடன் கைகுலுக்க முடியாமல் போய்விட, நீ எனக்குப் பூக்களை அனுப்பினாயே, நினைவிருக்கிறதா? ஓ! அந்தப் பூக்களுக்கு முன்னால் இரவெல்லாம் நான் மண்டியிட்டுக் கிடந்தேன். அந்தப் பூக்கள்தான் என் மீதான

உன் காதலை உறுதிப்படுத்தின. ஆனால் ஐயகோ! அந்த நம்பிக்கைகள் எல்லாம் நிறமிழந்து போயின. சொர்க்கத்தின் ஆசிர்வாதங்கள் நிறைந்த, அருளே வடிவான புனித தேவதையின் அன்பையும் கருணையையும் அவன் இழந்துவிட்டான்.

இவையெல்லாம் நிலையில்லாதவை. அவ்வப்போது வந்து செல்பவை. ஆனால் நேற்று உன் இதழ்களிலிருந்து உறிஞ்சிய உயிர்த்தேனை, இப்போது எனக்குள் நான் உணர்வதை, மரணத்துக்குப் பின்னான எந்தவொரு கணமும் மாய்க்க இயலாது, அது காலத்தில் வற்றாது. அவள் என்னை நேசிக்கிறாள். இந்தக் கரங்கள் அவளைத் தழுவின. இந்த உதடுகள் அவளுடைய இதழ்களின் மீது நடுங்கி ஒன்றின. இந்த வாய் அவளுடைய குரலுடன் சேர்ந்து பிதற்றியது. அவள் என்னுடையவள். நீ என்னுடையவள். ஆம் லாதே! எப்போதும் நீ என்னுடையவள்.

ஆல்பர்ட் உன் கணவன் என்பதற்கு என்ன அர்த்தம்? கணவன். அது இந்த உலகத்திற்கு. நான் உன்னை நேசிப்பதும் உன்னை அவனிடமிருந்து பிரித்து எனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்புவதும் இந்த உலகத்தைப் பொறுத்த வரையிலும் ஒரு பாவம். பாவமா? நல்லது. அதற்காக என்னை நானே தண்டித்துக்கொள்கிறேன். நான் இந்தப் பாவத்தை அதன் பரவசமிக்க அனைத்து ஆனந்தத்துடன், என் இதயத்தின் ஆக்கத்தையும் ஆற்றலையும் மீட்டுக் கொள்ளுமளவு ருசித்துப் பருகிவிட்டேன். அந்தக் கணத்திலிருந்து நீ என்னுடையவளாகிவிட்டாய். லாதே, நீ என்னுடையவள். என் தெய்வத்திடம், உன் தெய்வத்திடம் போகிறேன். அவரிடத்தில் நான் குறைகளை எடுத்துச் சொல்வேன். நீ வந்து சேரும்வரை அவர் எனக்கு ஆறுதல் தந்திருப்பார். அதன் பிறகு நான் உன்னிடம் பறந்து வந்து உன்னைப் பற்றி இறுக்கி, எல்லையின்மையின் முகத்திற்கெதிரே, முடிவற்ற தழுவலுடன் இணைந்துவிடுவேன்.



இது கனவல்ல. கானல் நீருமல்ல. கல்லறையை நெருங்கிவிட்ட நான் இன்னும் தெளிவாகக் காண்கிறேன். நிச்சயமாய் நாம் இருப்போம். மீண்டும் சந்திப்போம். உன் தாயைக் காண்போம். நான் அவளைத் தேடிக் கண்டுபிடித்து என் இதயத்தில் உள்ளதையெல்லாம் அவளிடம் கொட்டித் தீர்ப்பேன். உன் அம்மா! உன்னைப் போலவே இருக்கும் உன் அம்மா!

பதினோரு மணியளவில் வெர்தர் தன் வேலைக்காரனிடம் ஆல்பர்ட் வீடு திரும்பிவிட்டானா என்று விசாரித்திருக்கிறான். அவன் வந்துவிட்டதாயும், அவனது குதிரை போவதைப் பார்த்ததாயும் சொன்னான். பிறகு வெர்தர் அவனிடம் ஒட்டப்படாத இந்தக் குறிப்பைத் தந்திருக்கிறான்.

'நான் புறப்படவுள்ள பயணத்திற்கு உன்னுடைய கைத்துப்பாக்கிகளை இரவலாகத் தரமுடியுமா? விடைபெறுகிறேன்.'

அன்றிரவு லாதே தூங்கவேயில்லை. கொந்தளிக்கும் மனப்போராட்டத்தில் இருந்தாள். அவளுடைய இதயத்தில் ஆயிரமாயிரம் உணர்ச்சிகள் மோதின. அவளையும் மீறி, வெர்தரின் அணைப்பிலிருந்த மூர்க்கத்தை அவளது மார்பில் அழுத்தமாக உணர்ந்தாள். அதே வேளை களங்கமற்ற வெகுளித்தனமும் எதைப் பற்றியும் கவலைப்படாத தன்னம்பிக்கையும் கொண்டிருந்த முந்தைய நாட்களின் பன்மடங்கு அழகையும் கண்டாள். வெர்தர் வந்துபோனதைப் பற்றி அறிந்த பிறகு அவள் கணவனின் பார்வையையும், வெறுப்பும் கிண்டலும் கலந்த கேள்விகளையும் இப்போதே நினைத்துப் பார்த்து பயந்தாள். அவள் எப்போதும் எதையும் மறைத்ததில்லை. பொய் சொன்னதில்லை. ஆனால் முதன்முறையாக இப்போது தவிர்க்கமுடியாமல் அப்படிச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அவள் உணர்ந்த தயக்கமும் தர்மசங்கடமுமே அந்தத் தவறை அவள் கண்களில் ஒரு பெரிய விஷயமாகப் புலப்படுத்தியது. இருந்தும் அவளால் வெர்தரை வெறுக்கவும் முடியவில்லை. அவனை மறுபடியும் பார்க்கப் போவதில்லை என்று தனக்குத்தானே உறுதி மேற்கொள்ளவும் முடியவில்லை. விடியும் வரை அழுதுகொண்டேயிருந்தாள். ஓய்ந்துபோய் களைத்து தூக்கத்தில் அவள் ஆழ்ந்து கிடந்தாள். அதனால் அவள் கணவன் திரும்பியபோது அவளால் எழுந்துகொள்ளவோ உடுத்திக்கொள்ளவோகூட முடியவில்லை.

வாழ்க்கையில் முதன் முதலாக அவளுடைய இருப்பை அவளால் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாய் உணர்ந்தாள். கண்ணீருடனே தூக்கமின்றிக் கழித்த இரவின் தடயங்களை அவன் கண்டுகொள்வான் என்று நடுங்கியிருந்த அவளிடம் அவன் அப்படி எதுவுமே கேட்காதது அவளது குழப்பத்தை மேலும் அதிகரித்தது. எனவே அவனை அவள் அவசரமாகத் தழுவியபடி வரவேற்றாள். காதலும் மகிழ்ச்சியுமான தழுவலாக இல்லாமல் அது பதற்றமும் குற்றவுணர்ச்சிமிக்கதாயும் இருக்கவே ஆல்பர்ட்டின் கவனத்தை ஈர்த்தது. சில கடிதங்களையும் பெட்டிகளையும் திறந்து பார்த்த பிறகு, ஏதாவது நடந்ததா அல்லது யாரும் வந்து போனார்களா என்று கடுகடுப்புடன் கேட்டான். முந்தைய நாள் வெர்தர் வந்து ஒரு மணி நேரம் இருந்ததாய் தயக்கத்துடன் சொன்னாள். 'சமயம் பார்த்துத்தான் வருகிறான் அவன்' என்று சொல்லிவிட்டுப் படிக்கும் அறைக்குச் சென்றான். கால் மணி நேரம் வரையிலும் லாதே தனியாக அங்கேயே இருந்தாள். அவளது நேசத்திற்கும் மரியாதைக்கும் உரிய கணவன் அங்கிருந்தது அவளது மனத்தில் புதிய எண்ணங்களைத் தூண்டியது. அவனுடைய கனிவையும் பெருந்தன்மையையும் நேசத்தையும் எண்ணிப் பார்த்த அவள் அவற்றுக்குத் தகுந்தபடி தான் நடந்துகொள்ளாததை நினைத்துத் தன்னையே நொந்துகொண்டாள். புரிந்துகொள்ள முடியாத ஓர் உந்துதல் அவனைத் தொடர்ந்து செல்லும்படி தூண்டியது.

வழக்கமாகச் செய்துகொண்டிருக்கும் தன் கைப்பின்னலை எடுத்துக்கொண்டு அவனுடைய அறைக்குச் சென்றாள். அவனுக்கு எதுவும் வேண்டுமா என்று கேட்டாள். எதுவும் வேண்டாமென்று சொல்லிவிட்டு மேசையில் அமர்ந்து அவன் எழுதத் தொடங்க, அவள் அங்கேயே உட்கார்ந்து பின்னல் வேலையில் ஈடுபட்டாள். இப்படியே ஒரு மணி நேரம் வரை அவர்கள் ஒன்றாக அந்த அறைக்குள் இருந்தார்கள். அதன் பிறகு ஆல்பர்ட் எழுந்து அறைக்குள் நடமாடத் தொடங்கினான். லாதே அவனிடம் பேசினாள். ஆனால் அவன் அளவாகப் பதில் சொன்னான். சிலசமயம் ஒன்றுமே சொல்லவில்லை. மறுபடியும் தன் இருக்கையில் உட்கார்ந்துவிட்டான். கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டு மறைத்து வைக்க முயன்ற துக்ககரமான தொடர்ச்சியான எண்ணங்கள் மீண்டும் அவளை ஆட்கொண்டன.

வெர்தரின் வேலைக்காரனின் வருகை அவளைப் பலத்த தர்மசங்கடத்தில் தள்ளியது. ஆல்பர்ட்டிடம் அவன் வெர்தர் எழுதித் தந்த குறிப்பைத் தந்தான். ஆல்பர்ட் பதற்றப்படாமல் தன் மனைவியைப் பார்த்துச் சொன்னான். 'கைத்துப்பாக்கிகளை எடுத்துக் கொடு!' 'அவனுடைய பயணத்திற்கு என் வாழ்த்துகள்!' என்றான் அந்த இளைஞனிடம். இது அவளுக்குப் பெருத்த இடி விழுந்தது போலிருந்தது. எழுந்துகொள்ள முயன்று தடுமாறினாள். அவளுடைய உணர்ச்சிகளையே அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. மெல்ல அவள் சுவர் அருகில் சென்று நடுக்கத்துடன் அவற்றை எடுத்துத் தூசியைத் துடைத்துவிட்டுத் தயங்கினாள். ஆல்பர்ட்டின் துளைக்கும் பார்வை அவளைக் கட்டாயப்படுத்தாது இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் தாமதித்திருப்பாள். உயிர் கொல்லும் அந்த ஆயுதங்களை அந்த இளைஞனிடம் கொடுத்த அவள் ஒரு வார்த்தையும் பேச முடியாமல், அவன் போனதுமே தன் பின்னல் துணியைத் திரட்டியெடுத்துக் கொண்டு வெளிப்படுத்த முடியாத வேதனையோடு தனது அறைக்குள் சென்றாள்.

அவளது இதயம் அனைத்து விதமான அபாயங்களையும் முன்னறிவித்தது. முதலில் அவள் தன் கணவனின் காலில் விழுந்து எல்லாவற்றையும், முதல் நாள் மாலையில் நடந்தவற்றையும் தனது தவறுகளையும் இப்போது தான் அஞ்சும் தீயசகுனங்களையும் சொல்லிவிடத்தான் நினைத்திருந்தாள். ஆனால் அப்படிச் சொல்வதினால் என்ன பயன் விளையப் போகிறது என்று அவளால் உத்தேசிக்க முடியவில்லை. குறைந்தபட்சம் தன் கணவன் வெர்தரைச் சென்று பார்த்து வருவான் என்று மட்டுமே அவள் எதிர்பார்க்க முடியும். உணவருந்த ஏற்பாடானது. வெறுமனே நலம் விசாரிக்க வந்த லாதேவின் தோழி ஒருத்தியை அவள் விடைபெற்றுச் செல்ல அனுமதிக்காமல் இருத்தியதால், உணவருந்தும் போதான பேச்சு சுமுகமாக இருந்தது. அவர்கள் தங்களையே கட்டுப்படுத்திக்கொண்டனர். உதிரி விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். நடந்தவற்றை மறந்துவிடவும் முடிந்தது.

வேலைக்காரன் கைத்துப்பாக்கிகளைக் கொண்டு வந்து வெர்தரிடம் தந்தான். லாதேதான் அவற்றை எடுத்துக் கொடுத்தாள் என்று தெரிந்ததும் அவன் அந்தத் துப்பாக்கிகளை மிகுந்த திருப்தியுடன் பெற்றுக்கொண்டான். ரொட்டியையும் வைனையும் தருவித்துக் கொண்ட அவன், வேலைக்காரனைப் போய் சாப்பிடச் சொல்லிவிட்டு எழுத முனைந்தான்.

'அவை உன் கைகளால் தீண்டப்பட்டவை. அவற்றிலிருந்த தூசியை நீ துடைத்துத் தந்திருக்கிறாய். நீ தொட்டவை என்பதால் அவற்றை நான் ஆயிரம் முறை முத்தமிட்டேன். தேவலோகத்தின் அற்புத தேவியே, நீ என்னுடைய தீர்மானத்தை வழிமொழிந்திருக்கிறாய். லாதே, நான் உன் கரங்களில்தான் மரணத்தைத் தழுவிக்கொள்ள

**எதுவும் வேண்டாமென்று சொல்லிவிட்டு மேசையில் அமர்ந்து அவன் எழுதத் தொடங்க, அவள் அங்கேயே உட்கார்ந்து பின்னல் வேலையில் ஈடுபட்டாள். இப்படியே ஒரு மணி நேரம் வரை அவர்கள் ஒன்றாக அந்த அறைக்குள் இருந்தார்கள்**

விரும்பினேன். நீயே எனக்கு ஆயுதங்களைத் தந்திருக்கிறாய். ஐயோ! இப்போது தழுவிக்கொள்ளப் போகிறேன். என்னுடைய பணியாளை எல்லாவற்றையும் சொல்லும்படி கேட்டேன். அவற்றை நீ எடுத்துத் தந்தபோது நடுங்கியிருக்கிறாய். எனக்கு நீ விடைகொடுக்கவில்லை. ஐயோ! நீ விடை கொடுக்கவில்லை. என்னை உனக்காக எப்போதைக்குமாய் முத்திரையிட்டு வைக்கப்போகும் அந்தத் தருணத்துக்காக நீ உன் மனத்தை மூடிக்கொள்வது உனக்குச் சாத்தியமா? லாதே, ஆயிரம் ஆண்டுகளானாலும் அந்த முத்திரையை அழிக்க முடியாது. உனக்காகத் தன்னையே எரித்துக்கொள்பவனை உன்னால் வெறுக்க முடியாது.'

உணவிற்குப் பிறகு தன் வேலைக்காரனிடம் எல்லாவற்றையும் தயார் நிலையில் வைக்கும்படி சொல்லியிருக்கிறான். ஏராளமான தாள்களைக் கிழித்துப் போட்டிருக்கிறான். வெளியே சென்று தனக்கிருந்த சில சில்லறைக் கடன்களையெல்லாம் நேர் செய்திருக்கிறான். வீடு திரும்பிய பிறகு மறுபடியும் நகர எல்லைக்கு வெளியே சென்றிருக்கிறான். மழை பெய்து கொண்டிருந்தபோதும் பிரபுவின் தோட்டம் வரை போயிருக்கிறான். அக்கம்பக்கம் நடந்து திரிந்துவிட்டு இரவானதும் திரும்பி வந்து எழுதியிருக்கிறான்.

'வில்ஹெம், கடைசியாக ஒரு முறை நான் வயல்வெளிகளையும் காடுகளையும் வானத்தையும் பார்த்தேன். உன்னிடமிருந்தும், என் அம்மாவிடமிருந்தும் விடைபெறுகிறேன். அம்மா, என்னை மன்னித்துவிடுங்கள். அவளை நீதான் தேற்ற வேண்டும், வில்ஹெம். உங்கள் இருவருக்கும் கடவுள் அருள்புரிவாராக. எனது விவகாரங்கள் அனைத்தும் சரியாகவே இருக்கின்றன. விடைபெறுகிறேன். இனிய வேளைகளில் நாம் சந்திப்போமாக.

நான் உன்னை அவமதித்துவிட்டேன், ஆல்பர்ட். என்னை நீ மன்னித்துவிடுவாய். நான் உன் வீட்டின் அமைதியைக் குலைத்துவிட்டேன். உங்களிருவருக்கும் இடையில் சந்தேகங்களை விதைத்துவிட்டேன். விடைபெறுகிறேன். நான் முடிவை எட்ட இருக்கிறேன். என் மரணம் உன் மகிழ்வை மீட்டுத் தரட்டும். ஆல்பர்ட்! ஆல்பர்ட்! அந்த தேவதையை சந்தோஷமாக வைத்துக்கொள். கடவுளின் அருள் உனக்கு எப்போதும் உண்டு.'

மாலையில் வெகுநேரம் வரை அவன் ஏதேதோ காகிதங்களைத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். அவற்றில் பலவற்றையும் கிழித்துக் கணப்பில் போட்டுவிட்டான். நிறைய மூட்டைகளைக் கட்டி அவற்றில் வில்ஹெமின் முகவரியை எழுதினான். அவை எல்லாம் சின்னச் சின்னக் கட்டுரைகளும், முற்றுப்பெறாத சில விஷயங்களுமாய் இருந்தன. பெரும்பாலனவற்றை நான் கண்டேன். கணப்பை மூட்டிக்கொண்டு ஒரு குடுவையில் வைனை வரவழைத்த பிறகு வேலைக்காரனைச் சற்று தொலைவில், பிற பணியாட்களுடன் தூங்குவதற்காக அனுப்பிவிட்டான். காலையில் ஆறு மணிக்கு குதிரைகளுடன் வண்டி தயாராக இருக்க வேண்டுமென்று தன்னுடைய எஜமானன் சொல்லியிருப்பதால் சீக்கிரமே எழுந்துகொள்வதற்காக உடுத்தியிருந்த உடையுடன் அவன் படுத்துக்கொண்டான்.

பதினொரு மணிக்குப் பிறகு -

'என்னைச் சுற்றி எல்லாமே உறைந்திருக்க என் இதயம் அமைதியாக இருக்கிறது. கடவுளே, உள உறுதியும் பெரும் உத்வேகமும் மிக்க இந்த கடைசித் தருணத்திற்காக உனக்கு நன்றி.

என் அன்பே, நான் சாளரத்தின் அருகே செல்கிறேன். சூழ்ந்திருக்கும் மழை மேகங்களுக்கிடையிலும் மின்னும் சில மீன்களைக் காண்கிறேன். இல்லை, நீங்கள் உதிர மாட்டீர்கள். முடிவற்ற ஒருவன் தன் இதயத்தில் உன்னைத் தாங்கிக்கொண்டிருக்கிறான். என்னையும்தான். உடுக் கூட்டங்களிலேயே மிக அழகான சார்லஸ் வெயினுடைய சுழல் நட்சத்திரங்களைக் காண்கிறேன். நேற்றிரவு நான் உன்னிடமிருந்து புறப்பட்டு, வாசல் கதவை விட்டு வெளியே வந்தபோது அது என் எதிரில் இருந்தது. எப்போதுமே அதை மிகுந்த போதையுடன் பார்த்திருப்பேன். கைகளை மேலுயர்த்தி அதை ஒரு சின்னமாக, நான் அனுபவித்த பெரும் பரவசத்தின் ஒரு துளியாகக் கண்டிருப்பேன். ஓ லாதே, உன்னை எனக்கு நினைவுபடுத்தாததென்று என்ன இருக்கிறது? நீ எப்போதும் என்னை நினைத்துக்கொண்டிருப்பதில்லையா? உன் புனிதமான கைகள் தீண்டிய ஒவ்வொரு சின்னச் சின்னப் பொருட்க

**என் அன்பே, நான் சாளரத்தின் அருகே செல்கிறேன். சூழ்ந்திருக்கும் மழை மேகங்களுக் கிடையிலும் மின்னும் சில மீன்களைக் காண்கிறேன். இல்லை, நீங்கள் உதிர மாட்டீர்கள். முடிவற்ற ஒருவன் தன் இதயத்தில் உன்னைத் தாங்கிக்கொண்டிருக் கிறான். என்னையும்தான். உடுக் கூட்டங்களிலேயே மிக அழகான சார்லஸ் வெயினுடைய சுழல் நட்சத்திரங்களைக் காண்கிறேன்**

ளைக்கூட நான் ஒரு குழந்தையைப் போல, எப்போதும் பத்திரப்படுத்தி வைக்கவில்லையா?

இதோ எனக்குப் பிரியமான உன் நிழற்படம். எனது மரணத்தின்போது இதை நான் உனக்குத் திருப்பித் தருகிறேன், லாதே. இதை எப்போதும் என் நினைவாக வைத்திருக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இதன் மீது நான் ஆயிரமாயிரம் முறை முத்தமிட்டிருக்கிறேன். நான் வெளியில் செல்லும் போதும், திரும்பி உள்ளே வரும் போதும் இதனிடம் ஆயிரம் வந்தனங்களைச் சொல்லியிருக்கிறேன்.

என் உடலை நல்லடக்கம் செய்யுமாறு கேட்டு உன் தந்தைக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். தேவாலயத்தின் சுற்றுப்புறத் தோட்டத்தில் பின்பக்க மூலையில் வயல்வெளிகளுக்குப் போகும் பாதையில் இரண்டு எலுமிச்சை மரங்கள் உள்ளன. அங்கேதான் நான் உறங்க விரும்புகிறேன். அவர் தனது நண்பனுக்காக இதைச் செய்ய முடியும். செய்வார். நான் கேட்டுக்கொண்டதுடன் நீயும் அவரை வற்புறுத்தவேண்டும். பரிதாபமான ஒரு துரதிர்ஷ்டசாலியின் கல்லறையருகே மதப்பற்றுமிக்க கிறிஸ்துவர்கள் கல்லறையை அமைக்கத் தேவையில்லை. பாதையோரத்திலோ யாருமற்ற பள்ளத்தாக்கிலோ என்னைப் புதைக்க விரும்பியிருக்கலாம். என்னைப் புதைத்த இடத்தில் அடையாளமாக வைக்கப்பட்டிருக்கும் கல்லைப் போதகர்களும் மதத் தலைவர்களும் கடந்துபோகும்போது சிலுவையிட்டுச் செல்லக்கூடும். ஏழைப் பங்காளன் யாரும் ஒரு துளி கண்ணீர் சிந்தக்கூடும்.

இதோ, லாதே, மரணத்தின் அமுதத்தைப் பருக இருக்கும் இந்தக் கோப்பையைக் கையில் எடுக்க அஞ்ச மாட்டேன். இதை நீதான் என் கைகளில் தந்தவள் என்பதால் பயப்பட மாட்டேன். என்னுடைய வாழ்வின் எல்லா விருப்பங்களும் எதிர்பார்ப்புகளும் நிறைவேறிவிட்டன. குளிர்ந்து இறுகிய மிக்க திரைகளற்ற மரணத்தின் கதவை இதோ தட்டப்போகிறேன்.

உனக்காக மரிக்கும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. லாதே, உனக்காக என்னையே நான் தியாகம் செய்கிறேன். உன்னுடைய வாழ்வின் அமைதியையும் ஆனந்தத்தையும் என்னால் மீட்டுத்தர முடியுமென்றால் உறுதி கொண்ட நெஞ்சுடன், சந்தோஷமாக நான் இறந்துபோவேன். என்ன செய்வது? தாங்கள் நேசித்தவர்களுக்காக இரத்தம் சிந்தி, தம் மரணத்தின் மூலம் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வைப் பன்மடங்கு மேன்மைகளுடன் தொடங்கி வைக்கும் பாக்கியம் புனிதமான சில ஆன்மாக்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது.

என்னை இதே உடைகளுடன் புதைத்திட வேண்டுமென விரும்புகிறேன், லாதே. இவற்றை நீ தொட்டுப் புனிதப்படுத்தியிருக்கிறாய். எனக்காக இந்த உதவியைச் செய்ய வேண்டுமென உன் தந்தையிடம் கேட்டிருக்கிறேன். என் சவப்பெட்டியைச் சுற்றி என் ஆன்மா அலைந்துகொண்டுதானிருக்கும். என் உடையில் அவர்கள் எதையும் தேட வேண்டாம். குழந்தைகளுக்கு நடுவில் முதன்முதலாக நான் உன்னைச் சந்தித்தபோது நீ உன் மார்பில் அணிந்திருந்த வில் வடிவிலான ஊதா நிற வில்லை இதோ என்னிடம் இருக்கிறது. குழந்தைகளுக்கு நிறைய முத்தம் கொடுத்து மகிழ்ச்சியற்ற அவர்களது நண்பனின் விதியை எடுத்துச் சொல். என் இனிய குழந்தைகள், அவர்கள்தான் என் மீது எப்படியெல்லாம் ஏறிக் குதித்து விளையாடினார்கள்! அந்த முதல் சந்திப்பிலிருந்து நான் உன்னிடம் எவ்வளவு லயித்துப் போனேன்! உன்னிடமிருந்து விலக முடியாதவனாய் ஆனேன்! இந்த வில்லையும் என்னோடு புதைக்கப்படட்டும். என் பிறந்த நாளின் போது நீ இதை எனக்குத் தந்தாய். இதைத்தான் நான் எவ்வளவு ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டேன்.



ஐயோ, அந்தப் பாதை என்னை இங்கு கொண்டுவந்து சேர்க்கும் என்று நான் நினைக்கவேயில்லை. அமைதியாக இரு. நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அமைதியாக இரு.

அவை குண்டுகளிட்டு வைக்கப்பட்டுள்ளன. மணி பன்னிரண்டு அடிக்கிறது. சரி, இருக்கட்டும். லாதே, போய்வருகிறேன். லாதே, விடைபெறுகிறேன்.'

துப்பாக்கி வெடித்த ஓசையையும் அதன் நெருப்பையும் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் பார்த்திருக்கிறார். அதற்குப் பின் எந்தச் சத்தமும் இல்லாமல் எல்லாமே வழக்கம்போல் இருந்ததால் அதற்கு மேல் அதைப் பொருட்படுத்தவில்லை. ■

# நெஞ்சில் எரிச்சல் ஏற்படுவது ஏன்?

**கணேசன்**

பத்தாம் வகுப்பு படிக்கும் பிரதாப் அடிக்கடி நெஞ்சு வலிக்கிறது என்று என்னிடம் சிகிச்சைக்கு வருவான். 'பாடங்களைப் படிப்பதற்குச் சிரமப்படுவதால் இப்படிச் சொல்லி தப்பிக்கிறான்' என்று அவன் வீட்டில் சந்தேகப்பட்டனர். தொடக்கப் பரிசோதனையிலும் நோய் எதுவும் தெரியவில்லை. கடைசியில் வயிற்றை எண்டோஸ்கோப்பி எடுத்துப் பார்த்தபோதுதான் அவனுடைய பிரச்சினை புரிந்தது. பொதுவாக, 40 வயதுக்கு மேல் வரக்கூடிய நெஞ்செரிச்சல் (Heartburn) பிரச்சினை பிரதாப்புக்கு 15 வயதிலேயே வந்துவிட்டது. விளக்கமாக விசாரித்ததில் அவன் தினமும் சாப்பிடும் சிப்ஸ்தான் அதற்குக் காரணம் எனத் தெரிந்தது. அவன் உணவு முறையை மாற்றிக்கொண்டதும் நெஞ்செரிச்சல் காணாமல்போனது.

இன்றைய நவீன வாழ்வியலில் பிறந்த குழந்தை முதல் படுக்கையில் கிடக்கும் முதியோர் வரை அனைவருக்கும் உணவுமுறை மாறிவிட்டது. அதனால் ஏற்படும் தொற்றா நோய்க் கூட்டத்தில் நெஞ்செரிச்சலும் சேர்ந்துகொண்டது. 'சாதாரண தொந்தரவுதானே!' என்று இதை அலட்சியப்படுத்தவும் முடியாது. காரணம், அடிக்கடி நெஞ்செரிச்சல் ஏற்பட்டு, நாட்பட்டு நீடித்தால், அது புற்றுநோயில் கொண்டுபோய் விடக்கூடிய ஆபத்து உள்ளது.

### எதுக்களிப்பு நோய்!

வழக்கத்தில் நாம் 'நெஞ்செரிச்சல்' என்று சொன்னாலும், இது நெஞ்சு முழுதும் ஏற்படும் பிரச்சினை இல்லை. உணவுக்குழாயில் ஏற்படுகிற பிரச்சினை. இதை 'இரைப்பை அமிலப் பின்னொழுக்கு நோய்' (Gastro Esophageal Reflex Disease - சுருக்கமாக GERD) என்கிறார்கள் மருத்துவர்கள். 'எதுக்களிப்பு நோய்' என்றும் இதைச் சொல்லலாம்.

நம் உணவுக்குழாயில் இரண்டு 'கதவுகள்' (Sphinctres) உள்ளன. மேல்முனையில் இருக்கும் கதவு, நாம் உணவை விழுங்கும்போது அது மூச்சுக் குழாய்க்குள் செல்வதைத் தடுக்கிறது. கீழ்முனையில் இருக்கும் கதவு, இரைப்பையில் சுரக்கும் அமிலம் உணவுக்குழாய்க்குள் நுழைய விடாமல் தடுக்கிறது. இந்தக் கதவு உணவுக்குழாய்க்கும் இரைப்பைக்கும் இடையில் ஒரு பேரிகார்டுபோல் அமைந்துள்ளதால் சாதாரணமாக நாம் சாப்பிடும் உணவு எதுக்களிக்காமல் இரைப்பைக்குள் சமத்தாகச் சென்றுவிடுகிறது.

**வயிற்றில் அதிக அழுத்தம் இருந்தாலும் நெஞ்செரிச்சல் ஏற்படும். இதற்கான காரணிகளில் முதலாவதாக வருவது உடற்பருமன். இது தவிர, இறுக்கமாக ஆடை அணிபவர்கள், கர்ப்பிணிகள், வயிற்றில் கட்டி உள்ளவர்கள் ஆகியோருக்கு நெஞ்செரிச்சல் ஏற்பட இந்த அழுத்தமே காரணம்**

### பிரச்சினை எப்போது தொடங்குகிறது?

இரைப்பையில் இருக்கும் அமிலம் இந்த பேரிகார்டைக் கடந்து உணவுக்குழாய்க்குள் தேவையில்லாமல் நுழையும்போதுதான் தொடங்குகிறது. மழை அங்கி அணிந்துகொண்டால் மழையைத் தாங்கும்; தீயைத் தாங்குமா? அதுமாதிரிதான், உணவுக்குழாய் காரமான, சூடான, குளிர்ச்சியான உணவுகளைத் தாங்குமே தவிர, அமிலத்தின் வீரியத்தை அதனால் தாங்க முடியாது. இந்த அமில அலைகள் அடிக்கடி மேலேறி வரும்போது அங்குள்ள திசுப்படலத்தை அரித்துப் புண்ணாக்கிவிடும். இதனால் அழற்சி ஏற்பட்டு நெஞ்செரிச்சல் உண்டாகும். இது, இந்த நோயின் அடிப்படை அம்சம்.

### எதிரிகளை அறிவோம்!

இன்றைய தலைமுறை அதிகம் விரும்பிச் சாப்பிடும் இனிப்பு, காரம், மசாலா, கொழுப்பு மிகுந்த உணவுகள்தான் உணவுக்குழாய்க்கு முக்கிய எதிரிகள். இந்த உணவுகளை எப்போதாவது சாப்பிட்டால் தவறில்லை. அடிக்கடி சாப்பிட்டால் வந்து சேரும் இந்தத் தொல்லை. எப்படி? உணவுக்குழாயின் கீழ்க் கதவு இந்த உணவுகளின் ஆக்கிரமிப்பால் பலவீனமடைந்து கறையான் கடித்த கதவு போல் சிதைந்துவிடும். இதனால், இரைப்பையில் இருக்கும் அமிலம் மேல்நோக்கி வரும்போது அதைத் தடுக்க முடியாமல் சிரமப்படும். உணவுக்குழாய்க்குள் அமிலத்தை அனுமதித்துவிடும்.

இரைப்பையில் அளவுக்கு அதிகமாக அமிலம் சுரந்தாலும் அது உணவுக்குழாயின் கீழ் முனைக்குச் சென்று காயத்தை ஏற்படுத்தும். 'அல்சர்' எனப்படும் இரைப்பைப் புண் உள்ளவர்களுக்கு இப்படித்தான் நெஞ்செரிச்சல் ஏற்படுகிறது.

வயிற்றில் அதிக அழுத்தம் இருந்தாலும் நெஞ்செரிச்சல் ஏற்படும். இதற்கான காரணிகளில் முதலாவதாக வருவது உடற்பருமன். இது தவிர, இறுக்கமாக ஆடை அணிபவர்கள், கர்ப்பிணிகள், வயிற்றில் கட்டி உள்ளவர்கள் ஆகியோருக்கு நெஞ்செரிச்சல் ஏற்பட இந்த அழுத்தமே காரணம். வழக்கமாக, பெண்கள் சாப்பிட்ட பின்பு வீட்டை சுத்தம் செய்கிறேன் என்று குனிந்து நிமிர்ந்து வேலை செய்வார்கள். இதனாலும் வயிற்றில் அழுத்தம் அதிகரித்து, அமிலம் மேலேறி, நெஞ்செரிச்சல் உண்டாகும்.

சிலருக்கு இரைப்பையின் மேற்பகுதி மார்புக்குள் புகுந்து (Hiatus hernia) உணவுக்குழாயை அழுத்தும். இதன் விளைவாக அதன் தசைகள் கட்டுப்பாட்டை இழந்துவிடும். இதற்காகவே காத்திருந்ததுபோல் இரைப்பை அமிலம் உணவுக்குழாய்க்குள் படையெடுக்க, அங்கு புண் உண்டாகி நெஞ்செரிச்சல் தொல்லை தரும். பலருக்கு உணவு சாப்பிட்டவுடன் நெஞ்செரிச்சல் ஏற்படும்; சிலருக்குப் பசிக்கும்போது ஏற்படும். ஏப்பமும் எதுக்களிப்பும் சேர்ந்துகொள்ளும்.

### என்ன பரிசோதனை செய்வது?

'நெஞ்செரிச்சல்தானே... தானாகச் சரியாகிவிடும்' என்று மட்டும் அலட்சியமாக இருக்க வேண்டாம். இந்தப் பிரச்சினை உணவுக்குழாயிலிருந்து வருகிறதா, இதயத்திலிருந்து வருகிறதா என்று தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டியது மிக அவசியம். அதற்கு, நோயின் தொடக்கத்திலேயே



'கேஸ்ட்ரோ எண்டோஸ்கோப்பி' (Gastro endoscopy) மற்றும் இசிஜி (ECG) பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

என் வெளியூர் வாசகி ஒருவரின் அப்பாவுக்கு நீரிழிவு இருந்தது. அவருக்கு அடிக்கடி நெஞ்சில் எரிச்சலும் வந்தது. அதற்கு அவர் அல்சர் மாத்திரைகளைச் சாப்பிட்டு வந்தார். அதனால் அவருக்குத் தற்காலிக நிவாரணம் கிடைத்தது; நிரந்தரத் தீர்வு இல்லை. என்னிடம் யோசனை கேட்டார். 'இசிஜி (ECG) பார்த்துக்கொள்ளுங்கள். சிலருக்கு மாரடைப்பு ஏற்படும்போது தொடக்க அறிகுறியாக நெஞ்செரிச்சல் மட்டுமே உண்டாகலாம்' என்றேன். இசிஜி எடுத்துப் பார்த்தார்கள். நான் சொன்னமாதிரி அவருக்கு 'சைலன்ட் அட்டாக்' - மறைமுக மாரடைப்பு - இருந்தது. அதற்கு சிகிச்சை எடுத்ததும் நெஞ்செரிச்சல் இல்லை. இப்படி, இசிஜி எடுக்காமல் ஏமாந்தவர்களும் இருக்கிறார்கள். எனவேதான் இந்த எச்சரிக்கை.

அடுத்து, நெஞ்செரிச்சல் நாட்பட்டு இருந்தால் 'கேஸ்ட்ரோ எண்டோஸ்கோப்பி' மிக அவசியம். ஏனென்றால், நெஞ்செரிச்சல் உள்ளவர்களில் ஆயிரத்தில் 3 பேருக்கு 'பேரட் இசோபேகஸ்' (Barrett esophagus) எனும் புற்றுநோய் வரக்கூடும். தொடக்கத்திலேயே இதைக் கண்டுகொண்டால் குணப்படுத்துவது எளிது. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு முடிந்துவிடும்.

### சிகிச்சை என்ன?

இரைப்பையில் அமிலச் சுரப்பைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் அமிலத்தைச் சமன் செய்யும் மருந்துகளும்தான் இதற்குரிய சிகிச்சைகள். இவற்றுடன் அமிலம் உணவுக்குழாய்க்குள் செல்வதைத் தடுக்கும் மருந்துகள் (Prokinetic drugs) மற்றும் வாந்தி தடுப்பு மருந்துகள் தரப்படுகின்றன. நெஞ்செரிச்சலுக்கு அவ்வப்போது ஆன்டாசிட் மாத்திரைகளைச் சாப்பிட்டால் பிரச்சினை தீராது. மருத்துவர் கூறும் காலம் முழுவதும் சாப்பிட வேண்டும். அதுதான் முக்கியம்.

### தடுப்பது எப்படி?

நெஞ்செரிச்சலுக்கு உணவில் அக்கறை செலுத்த வேண்டியது முக்கியம். உறைப்புச் சேர்த்த, வாசனைத் திரவியங்கள் கலந்த, எண்ணெய் மிகுந்த, கொழுப்பு நிறைந்த, புளிப்பேறிய பன்னாட்டு உணவுகளை ஒதுக்குங்கள். நம் பாரம்பரிய உணவுகளைப் பின்பற்றுங்கள். ஒரேநேரத்தில் வயிறு நிறையச் சாப்பிடுவதைவிட மூன்று அல்லது நான்கு மணிநேர இடைவெளிகளில் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவது நல்லது.

சாப்பிடும் நேரத்தில் காலில் வெந்நீர் ஊற்றிக் கொண்டமாதிரி நடந்துகொள்ளாதீர்கள். நிதானம் இதற்கு முக்கியம். உணவை நன்றாக மென்று விழுங்குங்கள். சந்தோஷத்துடன் சாப்பிடுங்கள். கவலையாக இருக்கும்போதோ, கோபமாக

# நம்மவூர்ச் சுத்துமாத்து



## விதைகளில் சுத்துமாத்து

தற்போது மாடித்தோட்டம், வீட்டுத் தோட்டம் என்பன பலராலும் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை இலகுவாக வளர்ப்பது, அறுவடை செய்வது போன்ற யூரியூப் பதிவுகளும் அதிகம் உலா வருவதால் பலரும் வீட்டுத்தோட்டம் வைப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். வீட்டுத் தோட்டத்துக்குத் தேவையான சாடிகள், உர வகைகள், கன்றுகள் விதைகள் என்பவற்றைப் பலரும் பல இடங்களிலும் தேடியலைந்து வாங்குவதைக் காணமுடிகிறது. இந்தக் கன்றுகள், விதைகளை விற்கின்ற மையங்கள் அநேகமாகப் பல இடங்களில் திறக்கப்பட்டு வருகின்றன. எல்லா ஊர்களிலும் பாரம்பரிய இனங்களின் விதைகள் அழிக்கப்பட்டு 'ஹைபிரிட்' விதைகள் எனப்படும் ஆய்கூடத்தில் தயாரிக்கப்பட்ட கலப்பின விதைகள் அதிகளவில் பாவனைக்கு வந்துவிட்டன.

இந்தக் கலப்பின விதைகளை முதற் தடவையாகப் பயிரிடும்போது அதிக முளை திறன், அதிகமான அறுவடை எனக் கிடைப்பதால் அவற்றை உற்பத்தி செய்பவர்கள் மகிழ்வடைந்தனர். இந்தக் கலப்பின விதைகளை தயாரிக்கின்ற நிறுவனங்கள் அவற்றை உரிய டப்பாக்கள், பேணி களில் நிரப்பிச் சந்தைக்கு விடுகின்றன. இவற்றை உருவாக்குவதற்கு அதிக செலவாகின்ற காரணத்தால் இந்த விதைகளை முழுமையாக வாங்குவது வீட்டுத்தோட்டச் செய்கையளர்களால் முடியாத காரியம். விதையின் தொகையும் அதிகம். இததனால் தமது வீட்டுத்தோட்டத்துக்குத் தேவையான விதைகளைக் கடைகளில் சென்று பைக்கற்றுகளில் அடைத்து விற்பவர்களிடம் வாங்குகின்றனர். அல்லது நாற்றுமேடைக் கன்றுகளை வாங்குகின்றனர். ஆனால் இவற்றின் பெரும்பாலானவை முளைத்தாலும் அவை காய்ப்பதில்லை.

ஏற்கனவே ஒரு தடவை விளைவிக்கப்பட்ட ஹைபிரிட் இனக் காய்களிலும் பழங்களிலும் இருந்து பெறப்பட்ட விதைகளைப் பைக்கற்றுகளில் அடைத்து விற்பதால்தான் அவை இரண்டாம் தடவை முளைத்தாலும் காய்ப்பதில்லை. இதனால் அவற்றை வாங்கிப் பயன்படுத்துகின்ற வீட்டுத்தோட்ட ஆர்வலர்கள் பலர் சலிப்படைந்துள்ளனர். இந்த வியாபாரத்தில் எமது பிரதேசங்களுக்குப் பழக்கப்படாத பலர் ஈடுபடுகின்றனர். இவ்வாறான விதைகளைத் தனியாரிடம் வாங்காது அரச விதைப் பண்ணைகளில் வாங்குவதன் மூலமும் பாரம்பரிய இனங்களின் விதைகளை மீளுற்பத்தி செய்வதன் மூலமும் இத்தகைய சுத்துமாத்து வியாபாரிகளிடமிருந்து தப்பிக்க முடியும்.

---



## சுறா வறை

இந்த வார சமையல்



சுறா மீனில் வறை வறுத்துண்பதென்பது கரையோர மக்கள் மத்தியில் வெகு பிரபலமானது. சுறாக்களில் பல வகைகள் இருந்தாலும் பாற் சுறா என்கிற வகை மீனில், அதுவும் அளவில் சிறிதாக இருக்கின்ற - கிட்டத்தட்ட 2-4 அடிகள் வரையிலான நீளமாக இருக்கின்ற சுறா மீன்களைத்தான் இந்த வறைக்குத் தெரிவு செய்கிறார்கள். திருக்கை, நண்டு போன்றவற்றில் ஆக்கப்படுகின்ற வறையைப்பேல இந்தச் சுறா மீன் வறையும் ருசி மிகுந்தது. அத்தோடு பாற் சுறாவை வறையாக்கி உண்டால் பாலூட்டும் தாய்மாருக்குப் பால் அதிகளவில் சுரக்கும் என்கிற நம்பிக்கையும் பல ருக்கு உண்டு. அந்த வகையில் இந்த வாரம் சுறா மீன் வறையை எவ்வாறு ஆக்குவது என்று பார்ப் போம்.

### தேவையான பொருள்கள்

சுறா மீன் ஒன்று (மேற்கூறப்பட்ட அளவினது), சின்ன வெங்காயம் 100 கிராம், மிளகு, சீரகம் ஆகியன தலா ஒரு கரண்டியளவில். மஞ்சள் தூள் அரைத் தேக்கரண்டி, நல்லெண்ணெய், கடுகு, கறிவேப்பிலை, உப்பு ஆகியன தேவைக்கேற்ற அளவில்.

### எப்படிச் செய்வது...?

முதலில் சுறா மீனை வெட்டிச் சுத்தப்படுத்திச் சிறிய சிறிய துண்டுகளாக்கிக்கொள்ளவேண்டும். துண்டுகளாக்கியதும் சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து அதனோடு கூடவே நறுக்கிய சின்ன வெங்காயம், மஞ்சள் தூள், உப்புப் போட்டுச் சிறிதளவில் நீர் ஊற்றி அவிய வைக்கவேண்டும். மீன் துண்டுகள் அவிந்ததும் தண்ணீர் வற்றிவிடுமளவுக்கு நீர் விடுதல் அவசியம். அவிந்தும் நீர் மிகுதியாக இருந்தால் வடித்தெடுத்துவிட்டு மிளகு, சீரகத் தூள்களை இட்டுப் பிசைந்துகொள்ளவோ அகப்பையால் மசித்துக்கொள்ளவோவேண்டும். பின்னர் வறை வறுப்பதற்குரிய தாச்சியை எடுத்து அதற்குள் நல்லெண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை தாளித்து விட்டு மசித்து வைத்திருக்கின்ற சுறா மீன் கலவையைப் போட்டு வறுக்கவேண்டும். சுவையான சுறா மீன் வறுவல் தயார்.

---

## நெஞ்சில் ...

இருக்கும்போதோ சாப்பிட வேண்டாம். அதுபோல் பேசிக்கொண்டே சாப்பிட வேண்டாம். காபி/ தேநீர் வேண்டாம். இறைச்சி, முட்டை, சாக்லேட், காற்றடைத்த செயற்கை பானங்கள், குளிர் பானங்கள், சிட்ரஸ் பழங்கள் போன்றவற்றைக் குறைத்துக்கொள்ளுங்கள். மோரும் இளநீரும் நல்லது.

### எப்படிப் படுப்பது?

மிக முக்கிய யோசனை இது: சாப்பிட்டவுடன் படுக்காதீர்கள். குறைந்தது இரண்டு மணி நேரம் கழித்துப் படுக்கச் செல்லுங்கள். அப்போதுகூட படுக்கையின் தலைப்பகுதியை அரை அடியிலிருந்து ஒரு அடி வரை உயர்த்திக்கொள்வது நல்லது. படுக்கும் நிலையும் முக்கியம்.

அதிக நேரம் குப்புறப்படுப்பது, மல்லாந்து படுப்பது, வித்தியாசமான கோணங்களில் கால்களை நீட்டி மடக்கிப் படுப்பது போன்றவை தவறானவை. இடது பக்கமாகப் புரண்டு படுப்பதுதான் சிறந்தது. இந்த நிலையில் படுக்கும்போது, இரைப்பையில் உள்ள உணவு புவி ஈர்ப்பு விசை காரணமாக இரைப்பையில் முழுவதும் இறங்கிவிடும். இரைப்பையை எதுவும் அழுத்துவதில்லை. அமிலமும் உணவும் மேலே ஏற வழியில்லை. இதனால், நெஞ்செரிச்சல் ஏற்படுவதில்லை. மாறாக, வயிறு நிரம்ப சாப்பிட்டுவிட்டு, வலது பக்கமாகப் படுத்தால், இடது பக்கத்தில் இருக்கிற குடல் இரைப்பையை அழுத்தும். அப்போது இரைப்பையில் நிரம்பி இருக்கிற உணவும் அமிலமும் உணவுக்குழாய்க்குச் சமமாக வந்துவிடும் இதனால், இவை இரண்டும் உணவுக்குழாய்க்குள் எளிதாகப் புகுந்து நெஞ்செரிச்சலை ஏற்படுத்தும். எனவேதான் இடது பக்கமாகப் படுப்பது நல்லது என்கிறோம்.

இது கடைசிதான் என்றாலும் முக்கியமானது. புகை, புகையிலை, மது, பான், பீடா... இவை எல்லாமே உணவுக்குழாய்க்குச் சகுனிகள். இவற்றையும் ஓரங்கட்டுங்கள். உடற் பருமன் இருந்தால் அதைக் குறைக்க வழி பாருங்கள். அப்போதுதான் நெஞ்செரிச்சல் தொல்லை நிரந்தரமாகத் தீரும்.

51

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

ஏற்றுக்கொள்வதும் மறுப்பதும் மனம்தான். ஆக எமக்குள் எழுகின்ற அத்தனை விடயங்களுக்கும் முதற்காரணி மனம்தான். மனம் வகிக்கின்ற பன்முகப் பாத்திரமே எல்லாமுமாகிறது. எனது மனம் எனக்காக மட்டுமே எண்ணவேண்டும். திட்டமிடவேண்டும். முயற்சிக்கவேண்டும். அனைத்துமே எனக்காக மட்டுமே இருக்கவேண்டும். இது சுயநலமல்லவா? சுயநலமென்பது தீயதல்லவா? அது என்னோடிருப்பதை அனுமதிக்கலாமா?

நான் என்பதுதான் அடி ஆதாரம். இந்த நான் என்பது தவிர்க்கப்படவேண்டியதொன்று என்கின்ற சமயவாத கருத்துருவாக்கம் பற்றி ஏற்கனவே பேசியிருக்கிறோம். தேவைகள் என்பது எனக்கானது. தேவைகளை ஈடுசெய்வது அல்லது அதற்காக முயல்வது என்பதே செயல். திட்டமிடல் முயற்சி உழைப்பு என நிரன்முறைப் படுத்தப்பட்ட விடயங்களது பெறுதி தேவைகளை ஈடு செய்கிறது அல்லது ஈடுசெய்ய முயல்கிறது. இங்கு நான் எனுமொரு மையப்புள்ளி பற்றியே யாவும் ஒழுங்குபடுத்த அல்லது ஒருங்கு குவிக்கப்படுகின்றன.

குவிக்கப்படும் புள்ளி நான் என்பதிலிருந்தே விரிவடைகிறது. எப்போதும் முதலில் நான் அடுத்துத்தான் எனது என்கிற அடைமொழியால் சுட்டப்படும் அனைத்தும். அது குடும்பம், சுற்றம், ஊர், நகரம், பிரதேசம், நாடு, உலகு என எவ்வாறாவது நீண்டுகொண்டுபோகலாம். இவ்வாறான நான் என்பதைத் தவிர்ப்பதென்பது ஒரு ஏமாற்று என்று ஏன் கருதமுடியாதுள்ளது? இங்கு நான் நலமாக இருக்க விரும்புவது தவறா? அதுதான் சுயநலமா?

நான் நலமாக இருப்பதற்காக பிறனொருவனை துன்பத்துக்குள்ளாக்கலாமா என்கிற கேள்வி எழுகிறதா? கேள்வி நல்லதுதான். ஆனால் எனது இன்பத்துக்காக பிறனது இன்பத்தைப் பறிப்பது முற்றிலும் தவறானது என்பதை கவனத்தில் கட்டாயமாகக் கொள்வது அவசியம். நான் இன்பமாயிருப்பதைப் பார்த்துப் பிறனொருவன் துன்பப்படுகிறான். துன்பப்படுவான் என்றெல்லாம் எண்ணிக் குழம்புவது தேவையற்றதொன்றே.

நான் வாழவேண்டும் என்று வாழ்வது வாழ்க்கை. அது சுயநலமல்ல. நான் மட்டுமே வாழவேண்டும் என்று வாழமுற்படுவதுதான் சுயநலம். நான் எனது என எனது இன்பத்துக்காகவே பிறனை நோகச் செய்வது சுரண்டல். தவிர்க்கப்பட்டேயாக வேண்டியதொன்று. இன்பம் என்பதை கொடுக்க முடியாது. அது அவரவர் முயன்று அடைந்து அனுபவிக்க வேண்டிய ஒரு மாயப்பொருள்தான் என்பதை கருத்திலெடுப்பது நல்லது.

இன்பம் என்பது மாயப்பொருளா? அதனைத் தேடியா அலைந்துகொண்டிருக்கிறோம்? மாயப் பொருளென்றால் அடையப்படவே முடியாததா? என்கிறதோர் ஆதங்கம் எழுகிறதா? எழட்டும். ஆதங்கமாவது எண்ணங்களைத் தூண்டட்டும். இன்பம் அடையப்பட முடியாததொன்றல்ல. மாயப்பொருளை அடையலாமா என்கிற கேள்வி எழுகிறதல்லவா? இன்பமென்பது மாயமானதுதான். எமது மனத்தினது வடிவமைப்புகளில் ஒன்றுதான் அது. ஆகவே மனதினால் அடையக்கூடியதாகிறது.

மனம் தன்னால் உருவாக்கப்பட்ட இன்பம் என்கிற விம்பத்தை கலைத்துப்போட்டுவிட்டு துன்பமென்று ஓலமிடுகிறது. துவண்டு பொய் விடுகிறது. இன்பம் என்பதுகூட ஒருவகையான நம்பிக்கை எனப்படுகிற நம்பிக்கையீனம்தான். நான் இன்பம் அனுபவிப்பதற்கு எனது மனமே காரணியாகிறது. பிறரல்ல. அவ்வாறே ஒருவன் இன்பமென்று அனுபவிப்பது அவனது மனத்தினது நேர்விளைவேயன்றி வேறில்லை. துன்பமெனப்படுவதன் நிலையும் இதுதான். அவரவர் மனம்தான்.

பகல் இரவு -ஆண் பெண் என்று ஏராளமான எதிர்நிலைகளை தொட்டுணரமுடிகிற யதார்த்தச் சூழலை பட்டறிவாகக்கொள்ளத் தெரியாத அல்லது தவறவிடுகிற நாம்தான் இன்பம், துன்பம் என்கிற மாயைப் பொருளுக்கும் எதிர்நிலைகளை வகுத்திருக்கிறோம். அதனை எண்ணி குழம்பியலைகிறோம். துன்பமென்று அலைகிற அதே தொகை இன்பமென்றும் அலைகிறது.

எமது வாழ்வு குறுகியது என்றும் கூறுகிறோம் அந்தக் குறுகிய காலத்தை இன்பமென்றும் துன்பமென்றும் எண்ணி கரைத்துக் கொண்டும் இருக்கிறோம். மனம் ஏன் அப்படியொரு மாயையைக் கொண்டாடுகிறது? எது அல்லது எவை அப்படியாக மனத்தைக் குழப்பிவைத்திருக்கிறது அல்லது வைத்திருக்கின்றன? சிந்திப்போம்.

---

## இந்தப் போர்...

புதிய ஆட்சியாளர்கள் உக்ரேன் மொழி மட்டுமே ஆட்சி மொழி என்று விதித்தார்கள். இது உக்ரேன் வாழ் ரஷ்ய இனத்தவருக்கும் ரஷ்யாவுக்கும் உவப்பாக இல்லை.

மேலும், உக்ரேனில் பல சிறுபான்மை இனங்கள் உள்ளன. இவர்களில் கிளர்ச்சியாளர்கள் இருக்கின்றனர். ரஷ்யா இவர்களை வெளிப்படையாக ஆதரித்து வந்தது. இதில் டொனஸ்க், லூகான்ஸ் எனும் பகுதிகளை மாசி 21 அன்று விடுதலைப் பகுதிகளாக அறிவித்தது ரஷ்யா. இந்த நிழல் போரின் நீட்சிதான் மாசி மாதம் 24 அன்று உண்மைப் போராக மாறிவிட்டது.

### உக்ரேனில் அழிவுகள்

போருக்கான காரணம் யாராகவும் இருக்கலாம், எதுவாகவும் என்னவாகவும் இருக்கலாம். ஆனால் போர் அழிவைக் கொண்டுவரும். போர் பல்லாண்டு காலத்திற்கு ஆறாத காயங்களை உண்டாக்கும். இது ரஷ்யாவுக்கும் தெரியும். எனினும் அது உக்ரேன் மீது போர் தொடுத்தது. இப்போது ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. இதுவரை 20 லட்சத்திற்கும் மேற்பட்ட உக்ரேனியர்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

கடந்த ஒரு மாத காலத்தில் 953 உக்ரேனியக் குடிமக்கள் உயிரிழந்திருக்கின்றனர் என்று ஐ.நா. சபை தெரிவிக்கிறது. உண்மையான எண்ணிக்கை 4000ஐத் தாண்டும் என்கின்றன மேற்கு ஊடகங்கள். உயிரிழந்த போர் வீரர்களின் எண்ணிக்கை தனி. உக்ரேனில் வானூர்தி நிலையங்கள், அணு மின் நிலையங்கள் முதலான உள்கட்டமைப்புகளும் ரஷ்யத் தாக்குதலில் சேதமடைந்துள்ளன.

ரஷ்யா மூன்று திசைகளிலிருந்து உக்ரேனைத் தாக்கிவருகிறது. ரஷ்யா எதிர்பார்த்ததைவிட உக்ரேன் சக்தியோடு எதிர்த்துப் போராடிவருகிறது. அதேசமயம், ரஷ்யா உக்ரேனிய நகரங்களை தரை மட்டமாக்கும் நோக்கத்தோடு தாக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதனால் ரஷ்யாவின் முன்னேற்றம் மிதமாகவே இருக்கிறது. போருக்குப் பிறகு நகரங்களைக் கட்டியமைப்பது பெரும் சிரமமாக ஆகிவிடக்கூடாது என்பது ரஷ்யாவின் நோக்கமாக இருக்கலாம்.

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்தால் நேட்டோ படைகள் உதவிக்கு வரும் என்று உக்ரேன் எதிர்பார்த்தது. ஆனால், அது அப்படி நடக்கவில்லை. எனினும், ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு ஆயுதங்களை வழங்குகின்றன. அவை கடந்த ஒரு மாதத்தில் உக்ரேனுக்கு வழங்கியிருக்கும் ஆயுதங்களின் மதிப்பு ஒரு பில்லியன் டொலர் (ரூ.7000 கோடி) இருக்கும் என்கிறார்கள். அமெரிக்கா 6.5 பில்லியன் டொலர் மதிப்பில் ஆயுதங்களும், 13 பில்லியன் டொலர் மதிப்பில் உதவிகளும் வழங்க முன்வந்திருக்கிறது.

### ரஷ்யாவுக்குப் பாதிப்புகள்

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யா மீது பல பொருளாதாரத் தடைகளை விதித்துவருகின்றன. ரஷ்யாவிலிருந்து எண்ணெய், இயற்கை எரிவாயு, நிலக்கரி ஆகியவற்றை இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளது. ரஷ்ய எண்ணெய் இறக்குமதியைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளப்போவதாக அறிவித்திருக்கிறது பிரிட்டன். ஐரோப்பிய ஒன்றியமும் அவ்விதமே குறைக்கப் போகின்றன. அமெரிக்காவிலும், பிரிட்டனிலும், ஐரோப்பிய ஒன்றியத்திலும் பல ரஷ்ய வங்கிகள் தடைசெய்யப்பட்டுவருகின்றன. ரஷ்ய வானூர்திகளுக்கும் அனுமதி இல்லை. இவையெல்லாம் ரஷ்யாவின் பொருளாதாரத்தைக் கணிசமாகப் பாதிக்கும்.

### சமாதானம்

ரஷ்யா இந்தப் போரை நிறுத்துவதற்காக முன்வைத்த நிபந்தனைகளுள் மூன்று முக்கியமானவை: முதலாவதாக, உக்ரேன் நேட்டோவில் சேரக்கூடாது. இரண்டாவதாக, கிரிமீயா ரஷ்யாவின் பகுதியாக அங்கீகரிக்கப்படவேண்டும். டொனஸ்க், லூகான்ஸ் பகுதிகள் தனி நாடுகளாக ஏற்கப்படவேண்டும். மூன்றாவதாக, உக்ரேனிலிருந்து படையினர் அகற்றப்படவேண்டும். இவற்றுள் முதல் இரண்டு நிபந்தனைகளை உக்ரேன் ஏற்றுக்கொண்டுவிட்டது. மூன்றாவது நிபந்தனை சிக்கலானது. உக்ரேன் ரஷ்யாவின் அண்டை நாடாக இருப்பதால் அது ஒரு பாதுகாப்பு மண்டலமாக இருக்கவேண்டும் என்று கருதுகிறது ரஷ்யா.

ரஷ்யாவை அச்சுறுத்த உக்ரேன் பூமியை மேலை நாடுகள் பயன்படுத்திவருவதே ரஷ்யாவின் பிரச்சினை. ஸ்வீடன், பின்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் நீடித்தபோதும் நேட்டோவில் இணையவில்லை. அவை நடுநிலை நாடுகள் என்றழைக்கப்படுகின்றன. அவை தமது நாட்டின் மீது போர் தொடுக்கக் கூடாது என்று எல்லா அண்டை நாடுகளுடனும் ஒப்பந்தம் மேற்கொண்டிருக்கின்றன. இப்படியான ஒரு நடுநிலை நாடாக உக்ரேன் மாறவேண்டும் என்கிறது ரஷ்யா. இதற்கு உக்ரேன் ஆட்சியாளர்களும் மேலை நாடுகளும் சம்மதிப்பார்களா என்பது சந்தேகம்.

தற்சமயம் உக்ரேனின் மேற்கே அமைந்துள்ள போலந்து, ஹங்கேரி, பால்டிக் நாடுகளிலும், தெற்கே அமைந்துள்ள ருமேனியாவிலும் நேட்டோ படைகள் நிலைகொண்டுள்ளன. அண்டை நாடான உக்ரேனிலும் நேட்டோ படைகள் காலூன்றுவதை ரஷ்யா எதிர்ப்பதில் நியாயம் இருக்கிறது.

உக்ரேன் அதிபர் ரஷ்யாவுடனான அமைதிப் பேச்சுக்குத் தயாராக இருப்பதாகச் சொல்கிறார். ரஷ்யாவின் முதல் இரண்டு நிபந்தனைகளை ஏற்கத் தயாராக இருக்கிறார் எனவும் சொல்கிறார். இது பேச்சுக்கான நல்ல தொடக்கமாக அமையும். அதேசமயம், மறுபுறம் கடைசி உக்ரேன் குடிமகன் உயிர் தரித்திருக்கும் வரை போராடுவோம் என்றும் பேசி வருகிறார். அமெரிக்க- ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு கொம்பு சீவிவிடுவதும் தொடர்கிறது. எல்லாமாக இந்தப் போர் இன்னும் சில காலம் நீடிக்கும் என்று தெரிகிறது.

### திசைவழி

உக்ரேன் அதிபரின் நேட்டோவில் சேர மாட்டோம் என்கிற அறிவிப்பு ஒரு வெளிச்சக் கீற்றாக வந்திருக்கிறது. கிரிமீயாவை அங்கீகரிப்போம் என்பதும் நல்ல முடிவுதான். ஆனால், ரஷ்யாவைப் போன்ற இனத்தால், மொழியால் நெருக்கமான, பலம் பொருந்திய ஒரு அண்டை நாட்டை, மேலை நாடுகளின் ஆதரவை நம்பிப் பகைத்துக்கொள்வது உசிதமல்ல என்பதை உக்ரேன் உணரவேண்டும். ரஷ்யாவிற்கு எதிரான நிலைப்பாடோ நேட்டோவிற்கு ஆதரவான நிலைப்பாடோ எடுப்பதைத் தவிர்க்கவேண்டும். ரஷ்யாவும் மேற்கு நாடுகளும் உக்ரேனை ஒரு அமைதி மண்டலமாக அறிவிக்க வேண்டும். இது இந்தப் பகுதியில் பதற்றத்தைக் குறைக்கும், நீண்ட காலத் தீர்வாக அமையும், இந்தப் போரையும் முடிவுக்குக் கொண்டுவரும்.




# இணையத்திடமிருந்து குழந்தைகளைக் காப்போம்!

**ஜெயராஜ்.சே**

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் அனைத்துத் துறைகளிலும் இணையம் வேகமாக ஊடுருவி வருவதால் அந்நாடுகளில் இணையப் பயனர்களின் விகிதம் அதிகரித்து வருவதாக கூறும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், உலக அளவில் இணையத்தைப் பயன்படுத்துபவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் குழந்தைகள் என்று மதிப்பிடுகிறது.

கற்றலை வழங்குவதோடு குழந்தைகளிடையே ஆராய்ச்சி ஆர்வத்தினை தூண்டிய இந்த இணையவழி (ஆன்லைன்) பயன்பாடு பல ஆபத்துகளிலும் அவர்களை சிக்கவைத்துள்ளது.

அதிகப்படியான இணையப் பயன்பாடு கல்வியிலும் தொழில்முறை செயல்திறனிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

2020ஆம் ஆண்டு 'க்ரை' (சைல்ட் ரைட்ஸ் அண்ட் யூ) என்ற அமைப்பு இணையவழிப் பாதுகாப்பு குறித்தும் இணைய அடிமையாதல் குறித்தும் நடத்திய ஆய்வில் பதிலளித்தவர்களில் ஏறக்குறைய பாதி பேர் (48%) இணையத்திற்கு அடிமையானதை ஒப்புக்கொண்டுள்ளனர். அவர்களில் ஒரு சதவீதத்தினரிடத்தில் கடுமையான இணைய அடிமைத்தனம் உள்ளதாக இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

இணையத்திற்கு அடிமையாதல் என்பதனை மனநலக் கோளாறு என அங்கீகரித்துள்ளது 'மனநல நோயறிதல் புள்ளிவிவரக் கையேடு' (பதிப்பு 5). அதிகப்படியான, நீடித்த இணைய விளையாட்டுகள் குழந்தைகளின் அறிவாற்றலிலும் நடத்தையிலும் மிகப்பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தும் எனவும் அது கூறுகிறது.

கொரோனா கால பொதுமுடக்கம் குழந்தைகளுக்கு இணையவழி விளையாட்டுகளை அதிகளவில் அறிமுகப்படுத்தியது.

குழந்தைகளிடம் பாலியல் வன்முறை, அது சம்பந்தப்பட்ட காணொலிகளைத் தயாரித்து புழக்கத்தில் விடுதல், ஆபாச இணையத்தளங்கள், இணைய அச்சுறுத்தல், இணையவழி பாலியல் தொல்லை, இணையத்தினால் உருவாகும் பழிவாங்கும் உணர்வு போன்ற பல ஆபத்துகள் குழந்தைகளைச் சூழ்ந்துள்ளன.

பிரிட்டனைச் சேர்ந்த 'இன்டர்நெட் வாட்ச் டிரஸ்ட்' என்ற இணையவழி கண்காணிப்பு அமைப்பு 2021ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் பதிவுகள் அதிகமாக இருந்ததாக கண்டறிந்துள்ளது.

கொவிட் 19 பெருந்தொற்றின் போது உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் குற்றங்களால் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் குறித்து இன்டர்போல் அமைப்பு நடத்திய ஆய்வின் அறிக்கை, இணையவழி குற்றவாளிகள், குழந்தைகளை ஈர்க்கும் பொருட்டு இணையத்தில் செலவழிக்கும் நேரத்தை அதிகரிக்கக்கூடும் என்றும், குழந்தைகளிடத்தில் பிரபலமாக இருக்கும் தளங்களை குறி வைத்து அதன் மூலம் குற்ற செயல்களில் ஈடுபட அவர்களது இணையவழி சூழல்களைத் தொடர்ந்து மாற்றியமைக்கக் கூடும் என்றும் கூறுகிறது.



கொவிட் 19 ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடி, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சுரண்டலை அதிகப்படுத்தியுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

2020ஆம் ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குழந்தைகளுக்கு எதிராக இணையவழிக் குற்றங்கள் பல மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை ஏற்கனவே சிறுவர் பாலியல் சுற்றுலா காணொலிகளினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு. இங்கு இணைவழிக் குற்றங்கள் அதையொட்டிப் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

**அதிகப்படியான இணையப் பயன்பாடு கல்வியிலும் தொழில்முறை செயல்திறனிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்**

இணையம் இன்றைய குழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. குழந்தைகளுக்கு கல்வியையும், வாழ்வியல் நெறிகளையும் வழங்க கணிசமான பங்களிக்கும் இணையவழி பயன்பாட்டின்போது முகம் அறியாத மனிதர்களுடன் ஏற்படும் தொடர்பும், திரைப்பட நடிகர்-நடிகைகளும், குழந்தைகளுக்கு பிடித்தவர்களும் ஏற்படுத்தும் நடத்தை மாற்றமும் இணையவழித் தேடலின்போது அவர்கள் கற்கும் தேவையற்ற பாடத்தின் உள்ளீடுகளும் குழந்தைகளைக் கடுமையாகப் பாதிக்கின்றன.

இணையவழி பயன்பாட்டின் போது குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு போதுமான நிதி ஒதுக்கீடு தேவை. ஆனால் இலங்கையில் அது தொடர்பான விழிப்புணர்வோ ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அதற்கான நிதி ஒதுக்கீடுகளோ இல்லாதிருப்பது பெரும் குறை.

இணையவழி குற்றங்களைத் தடுக்கவும், இணையப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வைப் பரப்பவும் தற்போது குழந்தைகள் சார்ந்திருக்கும் இணையத்தின் பயன்பாட்டையும், போக்குகளையும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியம்.

அது மட்டுமே போதாது, இணைய நிர்வாகக் கொள்கை, குழந்தைப் பாதுகாப்பு இணையவழி சேவை, குழந்தைகளின் எண்ம (டிஜிட்டல்) உரிமைகளை உறுதிசெய்யும் வகையிலான ஒருங்கிணைந்த நடவடிக்கை ஆகியவையும் அவசியம். கொரோனாவால் உருவான இணையவழி தாக்கத்தின் தீங்கிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் நம் அனைவருக்குமான கடமை.

# தூங்கவிடுவோம் பதின்பருவத்தினரை!

ஜெயசீலன்



போதுமான, ஆழ்ந்த, இடையூறு இல்லாத தூக்கம் குழந்தைகளையும் பெரியவர்களையும்விடப் பதின்ம வயதினருக்கு அதிமுக்கியம். ஆனால், அவர்கள் குறைவான நேரம் மட்டுமே தூங்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பதின்ம வயதில் உள்ள பிள்ளைகளை, நேரத்துக்குத் தூங்கச் சொல்வதும், அதிகாலை எழச் செய்வதும் பெற்றோருக்குச் சவாலாக உள்ளது.

நிபுணர்கள் இரண்டு காரணங்களைச் சொல்கிறார்கள். 1. உடல் களைப்படையும்போதுதான் ஒருவர் இயல்பாகத் தூங்கத் தயாராவார். பதின்பருவத்தினரோ, இரவு வெகுநேரம்வரை களைப்படைவதே இல்லை. 2. தூக்கத்துக்கு உதவும் மெலடோனின் ஹார்மோன் பதின்பருவத்தினருக்கு ஏறக்குறைய இரவு 11 மணிக்கு மேல்தான் சுரக்கத் தொடங்குகிறது. அதிகாலை 8 மணி வரையும் சுரக்கிறது. எனவே, எதையாவது செய்துகொண்டு அல்லது திறன்பேசியில் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். காலையில் அதிக நேரம் தூங்க விரும்புகிறார்கள். பள்ளிக்கூடம், வீட்டுப்பாடங்கள், மாலைநேரக் கல்வி, திறன்வளர் வகுப்புகள், சமூக ஊடகங்களின் வளர்ச்சி போன்றவற்றுக்கு மத்தியில் போராடுகிறார்கள்.

ஒருபுறம், ஹார்மோன் மாற்றங்கள் சீக்கிரம் தூங்கவிடுவதில்லை, மறுபுறம் ஆரோக்கியமான வாழ்வுக்கு அதிக நேரம் கண்டிப்பாகத் தூங்க



வேண்டும். முரண்தான்! 0-18 வயதுடைய குழந்தைகள் மற்றும் பதின்பருவத்தினரின் ஆரோக்கியமான உடல்நலத்துக்குப் போதுமான தூங்கும் நேரத்தைப் பரிந்துரைக்க விரும்பிய நிபுணர்கள், தூங்கும் நேரத்துக்கும் உடல்நலத்துக்குமான தொடர்பு குறித்து அறிவியல்பூர்வமாக நடத்தப்பட்ட 864 ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வுசெய்தார்கள்; கலந்துரையாடினார்கள்; வாக்கெடுப்பு நடத்தினார்கள்.

முடிவில், அமெரிக்கன் அகாடமி ஆஃப் ஸ்லீப் மெடிசின் ஒருமித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், ஆரோக்கியமான உடல்நலத்துக்கு, குட்டித் தூக்கத்தையும் சேர்த்து, 4-12 மாதக் குழந்தைகள் 12-16 மணி நேரம்; 1-2 வயதுக் குழந்தைகள் 11-14 மணி நேரம்; 3-5 வயதுக் குழந்தைகள் 10-13 மணி நேரம்; 6-12 வயதுக் குழந்தைகள் 9-12 மணி நேரம்; 13-18 வயது பதின்பருவத்தினர் 8-10 மணி நேரம் கண்டிப்பாகத் தூங்க வேண்டும் என்றார்கள்.

மேலும், தேவையான நேரம் தூங்குவதை வழக்கமாக வைத்திருக்கிறவர்களுக்குக் கவனிக்கும் ஆற்றல் அதிகரிக்கிறது, நடத்தை, கற்றுக்கொள்ளுதல், நினைவில் வைத்தல், உணர்வுச் சமநிலை, தரமான வாழ்வு, உடல்-மன ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது. தேவையான நேரத்தைவிடக் குறைவாகத் தூங்குவதை வழக்கமாக வைத்திருப்பது, கவனம் செலுத்துதல், கற்றல் மற்றும் நடத்தையில் தாக்கம் ஏற்படுத்துகிறது. விபத்து, காயம், உடல் பருமன், மனச்சோர்வு, நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

தன்னைக் காயப்படுத்திக்கொள்ளும் எண்ணம், தற்கொலை எண்ணம், தற்கொலை முயற்சி ஆகியவற்றுக்கும் இது காரணமாகிறது. தேவையான நேரத்தைவிடக் கூடுதலாகத் தூங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளவர்களின் உடல்நலமானது உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, உடல் பருமன் மற்றும் மனநலச் சிக் கல்களால் மிகவும் மோசமாகிறது எனக் குறிப்பிட் டுள்ளார்கள்.

குழந்தைகளை ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிநடத்த வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது. ஆனால், பெற்றோர்களோ நல்ல பள்ளி, நல்ல மதிப்பெண், நல்ல வேலை, நல்ல ஊதியம் ஆகியவற்றை முன்னிறுத்தியே சிந்திக்கிறார் களேயொழிய, பிள்ளைகளின் உடல்-மன நலத்தைப் பொதுவாகக் கவனத்தில் கொள்வதே இல்லை. தொலைதூரத்தில் உள்ள பள்ளியில் சேர்த்து, அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் சிலர் அனுப்பிவிடுகிறார்கள். ‘பள்ளி நிர்வாகமே காலை உணவும் கொடுக்கிறது’ என்று பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள் வேறு சிலர்.

வேலைக்கு, கடைகளுக்கு, கூட்டங்களுக்குச் சென்றுவிட்டு அல்லது தொலைக்காட்சியிலும் கணினியிலும் நேரம் செலவழித்துவிட்டுக் குழந்தைகளுக்குத் தாமதமாக உணவு கொடுக்கும் குடும்பங்களும் இருக்கின்றன. சாப்பிட்ட பிறகும், படுக்கையில் படுத்தபடியும் திறன்பேசியிலோ தொலைக்காட்சியிலோ நேரம் செலவிடும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். படிப்பறைக்குச் சென்றதும் படிக்கவும், வழிபாட்டறைக்குச் சென்றதும் வழிபடவும் தோன்றுவதுபோல, தூங்கும் இடத்துக்குச் சென்றதும் தூக்கம் வரவேண்டும்.

அதற்கு, வெளிச்சம் ஏதுமின்றித் தூங்குமிடம் இருட்டாக இருப்பது சிறந்தது. படுக்கையறையில் தொலைக்காட்சி, தூக்கத்தின் முதல் எதிரி. தாங்கள் எப்போது, எப்படித் தூங்க வேண்டும் என்பதைப் பெற்றோரிடமிருந்துதான் பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள் எனும்போது, பெற்றோரே தூங்குவதற்கு ஒழுங்கில்லாமல் இருந்தால் பிள்ளைகள் என்ன செய்வார்கள்.

திறன்பேசி, தொலைக்காட்சி பார்ப்பதால் தூக்கம் வருவதில்லை என்பதை உணராமல், தூக்கம் வரவில்லை அதனால் பார்க்கிறேன் என்கிறார்கள் சிலர். சூரியனிலிருந்து வெளிப்படும் நீல ஒளி நமக்குப் புத்துணர்வு தருகிறது. நம் உடல் வளர்ச்சியிலும், மன வளர்ச்சியிலும் அதிகப் பங்கு வகிக்கிறது. இயற்கையான நீல ஒளி மட்டுமல்ல, செயற்கையான நீல ஒளியும் நமக்குப் புத்துணர்வு தரும். அதனால்தான், ஓய்வெடுக்க வேண்டிய நேரத்தில் திறன்பேசி, கணினி, தொலைக்காட்சி பயன்படுத்தும்போது, செயற்கையான நீல ஒளி உடல் தூங்க விரும்பும் நேரத்தில் தூங்கவிடாது செயலூக்கத்துடன் இருக்கச் செய்கிறது. மெலடோனின் சுரப்பைத் தடுக்கிறது. தூங்குவதற்கு நிறைய நேரம் எடுக்கிறது.

என் நண்பர் ஒருவர், ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் அவரது மகனின் வாட்சப்பில், கடைசியாகப் பார்த்த நேரம் அதிகாலை 4 மணி எனக் காட்டியதாகச் சொல்லி வருத்தப்பட்டார். உண்மைதான், தனக்கான அடையாளத் தேடலில் உள்ள பதின்பருவத்தினர், தங்கள் பதிவுக்கு எவ்வளவு பேர் விருப்பக் குறி (லைக்) இட்டுள்ளார்கள் என்று நள்ளிரவிலும் அவ்வப்போது பார்க்கிறார்கள்.

நெதர்லாந்தில், நீல ஒளியைத் தவிர்ப்பதற்கான கண்ணாடி அணிந்து பயன்படுத்தியவர்கள், அப்படி எதுவுமில்லாமல் வழக்கம்போலப் பயன்படுத்தியவர்கள், திறன்பேசியை சீக்கிரமே அணைத்துவிட்டுத் தூங்கியவர்கள் என 3 குழுக்களாகப் பிரித்து 12-17 வயது மாணவர்களிடம் ஓர் ஆய்வு நடத்தினார்கள். அன்றாட நடவடிக்கைகளைக் குறித்துக்கொள்வது, கருவியின் துணையால் தூங்குவதைக் கண் காணிப்பது ஆகியவற்றுடன், மெலடோனின் மாதிரியையும் எடுத்துப் பரிசோதித்தார்கள். முடிவில், தூங்குவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பாகத் திறன்பேசி, நோட்பேட் உள்ளிட்டவற்றை அணைத்து வைத்த பதின்பருவத்தினர் விரைவாகவும் ஆழ்ந்தும் தூங்கியதாகவும், நீல ஒளியைத் தவிர்ப்பதற்கான கண்ணாடி அணிந்தவர்கள் இரண்டாமிடத்தில் இருந்ததாகவும் கண்டறிந்தார்கள்.

ஆரோக்கியமான நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பிள்ளைகளுக்கு வழங்குவது உங்கள் உள்ளார்ந்த விருப்பமென்றால், குடும்பமே இணைந்து செயல்திட்டம் தீட்டுவதும் அதைப் பின்பற்றுவதும் நல்ல பயனளிக்கும். அதேபோல, குழந்தைகள், பதின்பருவத்தினர், பெற்றோர், கல்வியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் பொது மக்களுக்குப் போதுமான தூக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதனால், ஏற்படும் சமூக, பொருளாதார, கல்விசார் பயன்களை மக்களிடம் தெரிவித்துக் கலந்துரையாடலைத் தொடங்கவேண்டும். சின்னச் சின்ன வழிமுறைகளைப் பழகிக்கொண்டால், பெரிய பெரிய உடல் பிரச்சினைகள் வராமல் தவிர்க்கலாம்.

# வீணாய்ப் போகிறதெண்டிறது இதுதானோ?



**கதிரேசன் காத்தவராயன்**

"கதிரேசண்ணை மண்ணெண்ணை குடுக்கினமாம் கேள்விப்படேல்லையோ?" எண்டு கேற்றைத் திறக்கேக்குள்ளையே சத்தம் போட்டார் தம்பர். மனிசிக்கு இப்பிடியானதுகளெண்டால் படக்கெண்டு காதிலை விழுந்திடும். மேளுக்கும்தான். ரண்டு மூண்டு நாளாய் குக்கர்ப் பிரச்சனைதான் வீட்டிலை மனிசிக்கும் மேளுக்கும் ஓடிக்கொண்டிருக்குது.... "போய் வா.. எண்ணையோடை வா..." எண்டு விடைதராத குறைதான். மற்றநாளுகளிலை இஞ்சைதான் இதிலைதான் எண்டு வீடு முழுக்கத் தேடிற வழமைக்கு மாறாய் பதிவுமட்டையும் கானும் கண்ணுக்கு முன்னாலை வந்திட்டுகள்.

தம்பரோடை போக அங்கை பெற்றோல் நிலையத்திலை கொரோனாக்குப் பிறகு சனத்தை தொகையாப் பாக்கிற பாக்கியம் கிடைச்சுது. முக்கால் வாசிப் பேரிட்டையும் மாஸ்க் எண்டிற நாமமே கிடையாது... வரிசை வளைஞ்சு நெளிஞ்சு வலு நீளம்... எனி துணைக்கு வந்தவை புதினம் பாக்க வந்தவையெண்டு ஒரு தொகை... றோட்டு முழுதையும் வாகனங்கள்... சைக்கிள் வலு குறைவு மோட்டச் சைக்கிளுகள்தான் கூட. நாலிடத்துச்சனமும் இடிபாடு நெருக்குப்பாடுதான்...

"கதிரேசண்ணை வாங்கோ உதிலை நிப்பம்" எண்ட குரலுக்குப் பாத்தால் முருகேசரும் சம்பரும்... நாலு பேருமாய் அதிலை போக "ஐயாவை இடைக்குள்ள உள்ளடுறேல்லை எல்லாரும் கியூவிலைதான் வரவேணும்" எண்டு வரிசையிலை நிண்டவை கத்திச்சினம். சரியெண்டு வரிசையிலை கடைசியிலை நிண்டம். வரிசையிலை அரிசி தொடக்கம் அரசியல் உக்ரெயின் வரைக்கும் அவரவர் வசதிப்படி கதையளிலை வெய்யில் சூடு குறைஞ்சமாதிரிக் கிடந்துது.

"அண்ணை இந்த எண்ணை குடுக்கிற வேலையை சங்கத்துக் கிளையளிலை வைச்சுச் செய்தால் இப்பிடி இடிபடத்தேவையில்லையல்லே?" எண்டு தம்பர் தொடங்க "சங்கமோ? எங்கை கிடக்குது? கிளையளெல்லாத்தையும் கைவிட்டிட்டமில்லே? சுகத்தைப்பாத்தும் வசதியளைப்பாத்தும் கூட்டுறவு எண்டிறதையே கைவிட்டிட்டமில்லே?" எண்டு சம்பர் கொதிச்சார். அவர் சங்கவிசயத்திலை வல ஈடுபாடான ஆளில்லே?

"சம்பண்ணை நாங்கள் அந்தந்த நேரத்து வசதிக்கல்லே பழகிவிட்டம்... சங்கமெண்டதும் நிவாரணமெண்டதும் பழங்கதையாயல்லே போட்டுது? கூப்பன் முத்திரையெண்ட விசயம் என்ரை பேத்திக்குத் தெரியாது... ஔல்லிலை நைன்-ஏ எடுத்தவள்..." எண்டு சிரிச்சார் முருகேசர். "சண்டைக்காலத்து வாழ்க்கை முறையளைச் சொன்னால் நம்பாத ஒரு தலைமுறையல்லே இப்ப இருக்குது..." எண்டார் எங்களுக்கு முன்னாலை நிண்ட ஒராள்.

"சண்டைக்காலம் அரசாங்கம் அனுப்பாததாலை தட்டுப்பாடு... பதுக்கிறவை பயந்தல்லே இருந்தவை..." எண்டு சம்பர் சொன்னதுக்கு பதுக்கினாலும் சரி கண்டவிலைக்கு வித்தாலுஞ்சரி தப்புவினமோ? இல்லைத் துணிவுதான் வருமோ? பிடிச்சாங்களெண்டால் துலைவினமல்லே?" எண்டார் முருகேசர் பெருமையோடை. "ஊண்மைதான் பங்கிடுறதிலை வலு இறுக்கமாயல்லே இருந்தவங்கள்... அவங்கள் வைச்சதல்லே சட்டம்..." எண்டன் நான்.

"ஐயா.. இப்ப பெரிய பெரிய கப்பல்ல சாமானிறக்கிற வியாபாரியளல்லே சட்டம் போடுறாங்கள்..." எண்டார் எங்களுக்குப் பின்னாலை நிண்ட ஆள். கதையை அங்கை கிளம்பின சத்தம் நிப்பாட்டவைச்சுது. "ரோக்கிண் குடுக்கினமாம்" எண்டு சனம் சலசலத்துது... வரிசையுக்கை நுளையிறவை வரிசையைக் குழப்பிறவை எண்டு சனத்துக்கை கூச்சல் எழும்பிச்சுது... "வரிசையிலை நிக்கிறதே வாழ்க்கையாயிருந்தும் இன்னும் வரிசையிலை நிண்டு பழகாத கூட்டமாயல்லே இருக்கிறம்...." எண்டு நான் புல்பினது மற்றவையின்ரை காதிலை விழுந்துதோ என்னவோ?

"ஆங்கார் அதிலை ஏன் சனங் குவிஞ்சு கொண்டு நிக்குது?" எண்டு தம்பர் காட்டின இடத்தைப் பாத்தால் "அங்கைதான் மண்ணெண்ணெய் குடுக்கிறாங்கள்" எண்டார் பின்னுக்கு நிண்டவர். "ரோக்கிண் நம்பர் கூப்பிட்டல்லே குடுக்கிறாங்கள் பேந்தேன் குவியுதுகள்?" எண்டு நான் கேக்க "பழக்க தோசந்தான்... எங்கைதான் ஒரு ஒழுங்கை மதிச்சு விளங்கி நடக்கிறம் சொல்லுங்கோ பாப்பம்?" எண்டார் முருகேசர். "உண்மைதானப்பா... பட்டிச் செம்மறியள்தான்... ஒண்டு போனால் பின்னாலை போகவேண்டியது தான்..." எண்டு சம்பர் சொல்ல "அப்பிடியாவது ஒழுங்காய்ப் போயிருந்தால் இப்பிடி நடக்குமோ?" எண்டபடி நிழலுக்குப் போனன்.

---

## திசையறு சொல்லரங்கு - 5

*சொற்களது*
*சிதைவும் கலைவும்*
*தொலைவும்*
*கனவுகளாயாயின.*

*கனவுகளுக்கேன்*
*நிறங்களற்றுப்போயிற்று?*
*நிறம்*
*கவனமற்ற பொழுதுகளில்*
*சொற்கள்*
*அலைந்துகொண்டிருந்தன.*

*பாதிவழி கடந்தும்*
*வரைபடம் கையிருந்தும்*
*திசையறுதல் பற்றி*
*கவலை கொள்வது*
*கடமையேயாயிற்று.*



*கவலைகள்*
*கூடவேயிருப்பதுகூட*
*ஆறுதல்தான்.*
*குறித்தொதுக்கி*
*ஆறியிருந்து*
*ஒரு புள்ளியில்*
*ஒன்ற முடிகிறது.*

*சொற்களோடு*
*அலைவதிலும்*
*காலம் போகிறது*
*நானும் போலவே.*
*நீயுமா?*

**-கை.சரவணன்**

# பஞ்சம் பட்டினி சாவு: சோமாலியாவின் சோகம்

**இந்து**



இந்த உலகம் ஒரு புறத்தில் பணத் திமிரெடுத்தவர்களால் நடத்தப்படும் போரைக் கண்டுகொண்டிருக்கும் அதேவேளையில் மறுபுறத்தே உண்ண உணவின்றி, குடிக்கத் தண்ணீரின்றி பட்டினியால் மக்கள் உயிரிழப்பதைக் கண்டுகொள்ள மறுத்து அமைதி காக்கின்றது.

"என்னிடம் காரோ, கழுதைச் சவாரிக்கான பணமோ இல்லை. ஆனால், வறட்சியிலிருந்து தப்பித்து 200 கி.மீ. தொலைவில் உள்ள பையோடாவுக்கு செல்ல வேண்டியிருந்தது. எனது குடும்பத்தின ருடன் 15 நாட்கள் நடந்தே அங்கு சென்றேன். இந்த பயணத்தில் எனது 3 வயது குழந்தையும், எனது மனைவியும் தாகத்தால் உயிரிழந்தனர்" என்கிறார் 47 வயதான அலி அதான்.

சோமாலியாவில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி காரணமாக அலி அதானின் கால் நடைகள் எல்லாம் உயிரிழக்க, அலி உட்பட அவரது குடும்பத்தினர் 7 பேர் வேறு இடத்திற்குச் சென்றனர். அப்போதுதான் தனது மனைவி மற்று குழந்தையை அலி இழந்திருக்கிறார். அலி மட்டுமல்ல 7 வருடங்களுக்கு முன்னர் கணவரை இழந்த 10 குழந்தைகளின் தாயான, முமினோ மவ்லிம்மும் பல போராட்டங்களுக்கு இடையே பையோடாவுக்கு வந்திருக்கிறார்.

40 ஆண்டுகளில் இல்லாத மோசமான வறட்சியால் சோமாலியாவில் லட்சத்துக்கு அதிகமான மக்கள் கடுமையான பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். சுமார் 4.3 மில்லியன் மக்கள் உணவு, தண்ணீர், இருப்பிடமின்றி தவித்து வருகின்றனர்.

ஆப்பரிக்க கண்டத்தின் கொம்பு பகுதியில் அமைந்துள்ள சோமாலியாவில், நிலையான அரசு அமையாதது, தொடர்ந்து நடந்து வரும் உள்நாட்டு சண்டைகள், மழையின்மை ஆகியவை கடும் வறட்சிக்கு காரணமாகியுள்ளன. இதில் தெற்கு சோமாலியாவில் கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் தான் கடும் வறட்சிக்கு எதிராக சோமாலியா அரசு அவசர நிலையை அறிவித்தது. எனினும் 5 மாதங்கள் கடந்தும் சோமாலியாவில் நிலைமை சீராகவில்லை.

கடந்த சில வருடங்களில் மட்டும் சோமாலியாவில் இரண்டரை லட்சம் பேர் பட்டினியால் மடிந்துள்ளனர். இந்த எண்ணிக்கை கூடுதலாக இருக்கவும் வாய்ப்புண்டு. 20 லட்சம் பேர் பட்டினிச் சாவை எதிர்கொண்டு காத்திருக்கின்றனர் என்றும் ஐ.நா. அமைப்புகள் எச்சரித்திருக்கின்றன.

சோமாலியாவில் நான்கில் ஒருவர் பட்டினியால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. சோமாலியாவின் தென் பகுதியில், தண்ணீர் இல்லாததால் ஆடு, ஒட்டகங்கள், செம்மறி ஆடுகள், மாடுகள் மற்றும் கழுதைகள் இறந்து குப்பைகளாக காட்சியளிக்கின்றன. பல ஏரிகளில் தண்ணீர் வறண்டுவிட்டதால் முதலை உள்ளிட்ட நீர்வாழ் விலங்குகளும் உயிரிழந்து வருகின்றன.

சோமாலிய அரசுக்கு எதிராக அல்கொய்தாவுடன் இணைக்கப்பட்டுள்ள அல் ஷபாப் அயுத இயக்கத்தினர் அந்நாட்டில் அரசுக்கு எதிராகத் தொடர்ந்து நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலும் சொகுசுவிடுதிகள் மற்றும் சோதனைச் சாவடிகளைக் குறிவைத்து ஆயுததாரிகள் சமீப காலமாகத் தொடர்ந்து தாக்குதல் நடத்துக்கின்றனர். இதனால் பெரும்பாலான இடங்களில் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் நிலவுகிறது. இதன் காரணமாகவும் சோமாலியாவின் பொருளாதாரம் சரிந்துள்ளது.

சோமாலியாவில் இயங்கும் குழந்தைகள் பாதுகாப்பு தொண்டு நிறுவனத்தை சேர்ந்த முகமத் கூறும்போது, 'ஐந்து வருடங்களுக்கு முன்னர் பன்னாட்டுச் சமூகத்திலிருந்து போதுமான உத விகள் கிடைத்தன. ஆனால் தற்போது அப்படி இல்லை. உதவிக்கு தேவையான நன்கொடைகள் போதுமானதாக கிடைக்கவில்லை' என்கிறார்.

கொரோனா தாக்கம், பொருளாதார இறக்கம், உக்ரேன் போர் இவற்றின் காரணமாகவும் கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு தேவையான உதவிகள் கிடைக்கவில்லை என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறான சூழலில், சோமாலியாவுக்கு உடனடி தேவையாக பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து வரும் நிதிகள் தாமதமின்றி வந்தடைய வேண்டும். அது ஒன்றே கடும் பட்டினியில் சிக்கியுள்ள சோமாலிய மக்களையும், ஊட்டசத்து குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள அந்நாட்டின் குழந்தைகளையும் பாதுகாக்கும் ஒரே வழி. விரைவில் அதற்கான பாதை உருவாகும் என்று நம்புவோம். ■

---

# மனித உடலினுள்ளே குருதியில் நீந்தும் நுண்துகள் இயங்கி!

**வெ.ஈஸ்வரன்**

ஃபென்டாஸ்டிக் வாயேஜ் என்கிற ஹாலிவுட் திரைப்படத்தில் மருத்துவர்கள் நுண்துகள் அளவுக்குச் சுருங்கி, சிறிய நீர்மூழ்கிக் கப்பலில் மனித மூளைக்குள் பயணம் செய்வார்கள். மூளையில் ஏற்பட்டிருக்கும் குறைபாட்டைச் சரிசெய்வார்கள். இந்த அறி வியல் புனைகதையை உண்மையாக்கும் சாத்தியம் இருப்பதாக வருண் பதர் உள்ளிட்ட ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மனித உடலின் குருதிக் குழாய்கள் வழியே சில நானோ துகள்களை ரோபாட் போலச் செலுத்த முடியும். நானோ துகள்கள் மீன்களைப் போல நீந்தி, நோய்க் கட்டி இருக்கும் பகுதிக்குச் செல்லும். கங்காரு வயிற்றில் குட்டி இருப்பது போல, நுண் ரோபாட் துகள்களுக்கு உள்ளே மருந்து இருக்கும். நோய்க் கட்டியை அடைந்ததும் அந்த மருந்தை நானோ துகள் ரோபாட் உமிழ்ந்துவிடும்.

ரோபாட் என்றதும் இயந்திர மனிதன் என்று கருதிவிடவேண்டாம். இவை கோள வடிவில் இருக்கும் பாலி கார்பன் நைட்ரேட் நுண்துகள்கள். இவற்றைத்தான் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ரோபாட் நுண்துகள் எப்படி நீந்துகிறது? அதன் இயக்கத்துக்கு ஆற்றல் எங்கிருந்து கிடைக்கிறது?

மிக நுணுக்கமாக இருப்பதால் அவற்றின் உள்ளே மின்கலம் போன்ற ஆற்றல் சேமிப்புக் கலத்தைப் பொருத்த முடியாது. ஒளிதான் நுண் துகள்களுக்கு ஆற்றல் தரும்.

ஒளிவழி வேதியியல் விளைவுத் தூண்டல் மூலம் இந்த நுண்துகள் ரோபாட் நீந்தும். ஒளியை நோக்கி நுண்துகள் ரோபாட் செல்லும் என்பதால் உடலின் குறிப்பிட்ட பகுதி நோக்கி நம்மால் ரோபாட் நுண்துகளைச் செலுத்த முடியும். தூய நீரில் ரோபாட் நுண் துகள்களை நீந்த வைப்பது எளிது. உப்பு கலந்த உடலின் நிண நீரில் நீந்த வைப்பது பெரும் சவால்.

இந்தச் சவாலை எதிர்கொண்டால் தான் உடலில் நீந்திச் செல்லும்படியான நுண்துகள் ரோபாட்களை உருவாக்க முடியும். எங்களது ஆய்வில் பாலிகார்பன் நைட்ரேட் நுண்துகள்கள் உப்புக் கரைசலில் நீந்தும் எனக் கண்டுபிடித்துள்ளோம் என்கிறார் வருண் பதர்.

இவர்கள் கண்டுபிடித்த நுண்துகள் ரோபாட், உடல் திசுக்களுக்கு ஆபத்து விளைவிக்காது. எனவே, உடலுக்குள் செலுத்தி பயன்படுத்துவதில் சிக்கல் இருக்காது. இதே நானோ துளைகளில் மருந்தை இட்டு நிரப்பி நானோ துகள் ரோபாட்டை இயக்கலாம் அவை நீந்தி உடலின் குறிப்பிட்ட இலக்கை அடைந்த பின்னர் ஒளியால் தூண்டி, மருந்தை வெளிவர வைக்கவும் முடியும் என்கிறார்கள்.

---

## 13ஜ...

13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்தத் தவறியிருந்த நிலை யில் தமது ஆட்சியால் மட்டும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது சிக்கல்கள் நிறைந்தது என்றும் அவர்கள் வாதிட்டனர்.

இதைக் கேட்ட சம்பந்தன் கோபத்தோடு 13ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்றால் நாம் ஏன் பேசவேண்டும் எமது வழியே போகிறோம் என்று மேசையில் அறைந்து கத்தினார்.

உடனே தலையிட்ட அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச, அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று சொல்லவில்லை, நடை முறைப்படுத்துவதிலுள்ள சவால்களையே தெரிவிக்கிறோம். இருந்தாலும் முழுமையான அதிகாரப் பகிர்விற்கு அனைத்து முயற்சிகளையும் செய்வோம் என்றார்.

அத்தோடு வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பில் படையினர் ஈடுபடுவது தனக்குத் தெரியாது என்பதா கவும் அரச தலைவர் இந்தச் சந்திப்பில் காட்டிக்கொண்டார். படையினர் மேற்கொண்டுவரும் காணி சுவீகரிப்புத் தொடர்பாக கூட்டமைப்பினர் விளக்கியபோது, "படையினர் காணி சுவீகரிக்கிறார்களா? அவர்களுக்கு எதற்குக் காணி?" என்று கேள்வி எழுப்பிய அரச தலைவர், வயல் நிலங்களுக்குள்ளும் விவசாய நிலங்களுக்குள்ளும் மக்கள் நுழைவதற்குத் தடை விதிப்பது ஏற்க முடியாத நடைமுறைகள் என்றும் கூறினார்.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் அனைத்துக் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துமாறும் இது தொடர்பில் கூட்டமைப்பினருடன் பேசிய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கூட்டமைப்பினர் முன்வைத்த கோரிக்கையை அரச தலைவர் ஏற்றுக்கொண்டார்.

# செக்காவ்:



# ஒரு மருத்துவக் கதை சொல்லி

தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான ஆன்டன் செக்காவ் **(1860-904)** அடிப்படையில் ஒரு மருத்துவர். மாஸ்கோவில் மருத்துவம் பயின்ற செக்காவ் அங்கே களப்பணியாற்றச் சென்றபோது, அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு, வறுமையில் தள்ளப்பட்டு, மக்கள் எவ்வாறு நோயாளிகளாக உருமாற்றப்படுகிறார்கள் என்று தெரிந்துகொண்டபோது அதிர்ச்சி அடைந்தார்.

மருத்துவம் படித்தால் பணம் சம்பாதிக்கலாம், படைத்துறைக் கட்டாய சேவையிலிருந்து விலக்குப் பெறலாம் என்றெல்லாம் எண்ணியிருந்த செக்காவ், இந்த மனிதர்களையெல்லாம் பார்த்த பிறகு, இவர்களுக்குச் சேவை செய்வதையே தன் முழு நேரத் தொழிலாக்கிக் கொண்டார்.

நோயாளிகளிடமிருந்து ரொட்டியும் முட்டையும் குளிராடையுமே அவர்களுக்கு மருத்துவம் பார்த்ததற்கு அவருக்குக் கட்டணமாகக் கிடைத்தது. தனக்குக் காசநோய் முற்றிய நிலையிலேயும் தானே வைத்தியம் செய்துகொள்ள வேண்டிய அளவில் உடல் நலிவுற்றிருந்தாலும்கூட மக்கள் சேவையை செக்காவ் நிறுத்தவில்லை.

மருத்துவர் என்ற அளவில் ஏழை எளியவர்களின் உடல் பிரச்சினைகளுக்கு மருத்துவம் செய்த செக்காவ், ஒரு எழுத்தாளராக அவர்களின் மனங்களை ஆராயத் தொடங்கினார்.

பற்றிக்கொள்ள எந்தவிதமான நம்பிக்கையும் இன்றி, எதிர்காலம் குறித்த எந்தவிதமான யோசனையும் இன்றி, சலிப்படைந்துபோயிருந்த மக்களே செக்காவின் சிறுகதைப் பாத்திரங்களாக ஆனார்கள். அப்படி இயலாமையில் உழன்றுகொண்டிருந்தவர்களைக் கொண்டே, தன் அமரக் கதைகளை வடித்தார் செக்காவ். இப்படிப்பட்டவர்களின் ஆழ்மனதுக்குள் நுழையும் வித்தையைக் கற்றிருந்தார் செக்காவ்.

உறவுகளின் விரிசல்கள், அதனால் விளையும் குழப்பங்கள், அவநம்பிக்கை இவையே செக்காவின் கதைகளின் கருப்பொருட்களாக இருந்தன. பசியை விடவும் புறக்கணிப்பு மிகக் கொடுமையானது என்பதை செக்காவ் புரிந்துகொண்டார்.

சிறுவன் வான்காவின் நம்பிக்கையின் வழியே வாசகருக்குக் கடத்தப்படும் பெரும் துயரம், ஒரு தும்மலால் அவதிப்படும் எழுதுநர், இலக்கற்ற வாழ்க்கையின் எல்லாத் திசைகளிலும் தோல்வி ஒன்றையே காணும் நிகோலோய், பச்சோந்தியாய் நிமிடத்துக்கொருதரம் நிறம் மாறும் அரசு ஊழியர் இவர்களெல்லாம் செக்காவ் படைத்த சித்திரங்கள்.

விளிம்புநிலை மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேசினாலும் ஒரு சிறுகதை என்பது பரப்புரைத் தொனியில் இருக்கக் கூடாது என்றார் செக்காவ். ஒரு சிற்பி சிற்பத்தைச் செதுக்குவதுபோல் சிறுகதையைச் செதுக்க வேண்டும் என்று சொன்னார். மனித இயல்பை ஆராய்வதே தன் கதைகளின் மையப் புள்ளி என்று சொன்ன செக்காவ், மனித இயல்புகளைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுவதற்கு மிகச் சரியான வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

வழக்கொழிந்துபோன சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஒரு சொல்கூட வீணடிக்கப்பட்டுவிடக்கூடாது என்றும் சொன்னார் செக்காவ். ஒரு நபரின் குணாம்சத்தை ஓரிரு வார்த்தைகளில்கூடச் சொல்லிவிட முடியும் என்றார்.

பீட்டர்ஸ்பர்க் ஒப்பந்தத்தின் மூலம் ஜப்பானிலிருந்து சகலின் தீவு ரஷ்யாவின் கைகளுக்கு வந்திருந்தது. ரஷ்யா அந்தத் தீவை ஒரு தண்டனைத் தீவாக மாற்றியிருந்தது. அங்கே கைதிகள் விலங்குகளைப் போல நடத்தப்பட்டார்கள். சகலின் தீவில் செக்காவ் வசித்த நாட்கள் அவர் மனதை மிக ஆழமாகப் பாதித்தன. அங்கே இருந்த குற்றவாளிகளுடன் நடந்த உரையாடல்கள் அவரைச் சிந்திக்க வைத்தன. ரஷ்யாவின் அரசியல் பற்றி அவருக்கு நிறையக் கேள்விகள் எழுந்தன. அது அவருடைய எழுத்தின் போக்கில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது.

வாழ்க்கையின் முரண்களை முன்வைத்தே செக்காவின் கதையுலகம் நகர்கிறது. 'அரச எழுதுநரின் இறப்பு' (The Death of a Government Clerk) என்ற சிறுகதையில், தன் உயர் அதிகாரி தன்னிடம் கோபப்பட்டு விடுவாரோ என்ற கற்பனை பயத்திலேயே உயிரை விடும் எழுதுநர், ரஷ்யாவின் அன்றைய அரசு அலுவலகங்களில் புரையோடிப்போயிருந்த போலித்தனங்களை நம் கண் முன் கொண்டுவருகிறார்.

செக்கோவ் கண்டுணர்ந்து காட்சிப்படுத்திய மனிதர்களின் ஆழ்மனப் போராட்டங்கள்கூட கூர்மையான சமூக விமர்சனத்தை முன்வைத்தன. சமூக அவலங்களையெல்லாம் இந்த ஏழை எளிய மனிதர்களின் கண் கொண்டே காட்சிப்படுத்தும் செக்கோவ், மிகப் பெரிய சமூக மாற்றங்கள் இந்த மக்களின் வாழ்வில் அரங்கேற்றும் அவலங்களைத் தன் கதைகளில் பதிவிடுகிறார்.

தனது மகனின் இறப்பால் மிகுந்த துக்கம் அடைந்த குதிரைவண்டியோட்டி ஒருவர், தன் துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள யாராவது இருக்கிறார்களா என்று தேடுகிறார். அவருடன் நின்று பேசவோ, அவருடைய துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளவோ யாரும் முன்வராத நிலையில், அவர் தன் குதிரையிடம் பேசுகிறார். மகன் இறந்த துக்கம் பெரியதா, அதனைப் பகிர்ந்துகொள்ள யாரும் கிடைக்காத துக்கம் பெரியதா என்ற கேள்வி நமக்கு எழுகிறது.

செக்காவின் புகழ்பெற்ற சிறுகதைகளுள் ஒன்றான 'ஆறாவது வார்டு' கதை, ஒரு மனநோயாளிக்கும் மனநல மருத்துவருக்கும் இடையே நடக்கும் வாக்குவாதத்தின் மூலம் அன்றைய ரஷ்யாவின் நிலை, அரசியல் எப்படி அதிகாரத்தின் குவிமையமாக இருந்தது, இப்படிப்பட்ட ஒரு நிலையை ஒரு தனிமனிதர் எப்படி எதிர்கொள்கிறார் என்பதையெல்லாம் விவரிக்கிறது.

இந்தச் சிறுகதைதான் தன்னை ஒரு போராளியாக மாற்றியது என்று லெனின் பதிவுசெய்திருக்கிறார். **1904** ஆடி **15** அன்று ஜெர்மனியில் செக்காவ் இறந்த பிறகு, அவரது உடல் ரயிலில் ரஷ்யாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவரது உடலை வைப்பதற்கு ஒரு குளிர்சாதனப் பெட்டி தேவைப்பட்டது. கடல் சிப்பிகளைக் கொண்டுவரும் குளிர்சாதனப் பெட்டியில் அவரது உடல் வைக்கப்பட்டு, பெட்டியின் மேலே சிப்பி என்று எழுதப்பட்டு அவரது உடல் எடுத்துவரப்பட்டது. இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட மாக்சிம் கார்க்கி கதறி அழுதார்.

செக்காவ் தன் நண்பருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் 'இந்த பிரபஞ்சத்தின் மிகப் பெரிய விந்தை மனிதனே' என்று சொல்லுகிறார். அவனை ஆராய்வதே தன் வேலை என்றும் சொல்கிறார். இப்படி மனிதர்களின் ஆழ்மனதுக்குள் சென்று, அடியாழத்தில் பொதிந்துள்ள விந்தைகளை அலசி ஆராய்ந்த செக்காவ், இவற்றுக்கான தீர்வைப் பொதுவெளியில் தேடத் தொடங்கிய அறியாமையே ரஷ்யாவின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று சொல்கிறார்.

ஒரு மருத்துவராக நோய்க்கான காரணத்தைச் சொன்னவர், அதற்கான தீர்வாகச் சொன்னதுதான் கல்வி. அறியாமை இருளில் இருந்து கல்வியின் துணை கொண்டு வெளியே வர செக்காவ் கண்ட கனவு ரஷ்யாவிற்கு மட்டுமல்ல... உலகம் முழுமைக்குமானது.

## அக் ஷராவுக்கு பரிட்சை!



மூன்று வருடத்துக்கு ஒரு படத்தில் நடித்தாலும் ஈடுபாட்டுடன் நடிக்க முயல்பவர் கமலின் இளைய மகளான அக்ஷரா ஹாசன். அவரைப் பெண் மையக் கதாபாத்திரமாகக் கொண்டு உருவாகியிருக்கும் படம் 'அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு'. அதில், பழமைவாதக் குடும்பத்தைச் சேர்ந்த பவித்ரா என்கிற **19** வயதுப் பெண்ணின் நவீன உலகப் பாடுகளை பிரதிபலிக்கும் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் அக்ஷரா. இந்தப் படத்தை எழுதி இயக்கியிருப்பவர் ராஜா ராமமூர்த்தி. அக்ஷராவுடன் உஷா உதுப், அஞ்சனா ஜெயபிரகாஷ், மால்குடி சுபா, ஜானகி சபேஷ், சுரேஷ் சந்திர மேனன் நடித்துள்ள இப்படம் இன்று அமேசான் பிரைம் வீடியோவில் வெளியாகியிருக்கிறது. 'கிட்டத்தட்ட இது எனக் கொரு பரிட்சை' என்று கூறியிருக்கிறார் அக்ஷரா.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781